THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 24th February 1954.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at eleven of the clock, Mr. Speaker (THE HON. SRI J. SIVASHANMUGAM PILLAI) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Increase of taxes by Quilandy Panchayat Board, North Malabar.

* 5 *Q.*—SRI K. T. SREEDHARAN (on behalf of Sri M. Narayana Kurup) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any protests and representations direct or through the Inspector of Municipal Councils and Local Boards against the increase of taxes by Quilandy Panchayat Board, North Malabar; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI K. RAJARAM :—" (*a*) yes, Sir.

" (*b*) The Inspector of Municipal Councils and Local Boards has been requested to enquire into the complaints and to submit a report early in the matter. The receipt of his report is awaited."

SRI V. R. KRISHNA AYYAR :—" May I know when the complaint or representation was made and why there is such a long delay? "

THE HON. SRI K. RAJARAM :—" The complaint was received in December and it was forwarded to the Inspector of Local Boards."

SRI C. KUNHIRAMA KURUP :—" Wherever the Government are convinced that the taxes levied by a panchayat board are abnormally high, will the Government take necessary steps to bring down the taxes? "

THE HON. SRI K. RAJARAM :—" If the Government are convinced, they will take necessary action."

SRI P. RANGASWAMI REDDIAR :—" What is the nature of the taxes proposed to be increased? "

THE HON. SRI K. RAJARAM :—" Taxes coming within the purview of the Madras Village Panchayats Act."

SRI K. VINAYAKAM :—" Pending enquiry by the Inspector of Local Boards into the allegation of increase of taxes by the Panchayat Board, what direction was given to the Executive Officer of the Panchayat Board, to collect the taxes at the old rate or to give effect to the enhanced rate? "

[24th February 1954

THE HON. SRI K. RAJARAM :—" The maximum and the minimum rates of tax are laid down in the Village Panchayats Act and it is within the power of the panchayat board to adopt any rate between the minimum and the maximum. The Government cannot interfere without enquiring into the matter."

SRI K. P. GOPALAN :—" Is it not the general policy of this Government to increase the taxes in the panchayat and municipal areas? "

THE HON. SRI K. RAJARAM :—" It is not the policy of the Government; it may be the policy of the respective panchayats."

SRI S. RAMALINGAM :—" திருத்துறைப்பூண்டி பஞ்சாயத்துப் போர்டானது இருக்கக் கூடிய வரியை உயர்த்தின போது, அந்த ஜில்லாக் கலெக்டர் உடனடியாக அவ்விஷயத்தில் தலையிட்டு அந்த வரி உயர்வை நிறுத்தி வைக்க வேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறார். அதே மாதிரியாக இந்த குயிலாண்டி பஞ்சாயத்துப் போர்டு விவகாரத்திலும் அந்த ஜில்லாக் கலெக்டர் தலையிட்டு உடனடியாக வரி உயர்வை தடுத்து நிறுத்தி வைக்க முயற்சி செய்யக்கூடாதா ? அல்லது சர்க்காரே அவருக்கு அம்மாதிரி தலையிடும்படி உத்திரவு போடக்கூடாதா ? "

THE HON. SRI K. RAJARAM :—" Government cannot interfere so easily. If the Collector thinks that there will be disturbance to law and order, he can interfere."

SRI M. KALYANASUNDARAM:—" சர்க்கார் இவ்விஷயத்தில் குறுக்கிடக் கூடாது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னதை நான் வரவேற்கின்றேன். ஆனால் என்னுடைய அனுபவத்தின் வாயிலாக நான் சொல்லுகின்றேன். சில பஞ்சாயத்துக்கள் இருக்கும் வரியைக் குறைத்த போது, குறைந்த பட்சம் என்ன வரி விதிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறதோ அதற்குக் கீழே குறைக்கக் கூடாதென்று, ஜில்லா அதிகாரிகள் குறைத்த வரியையும் உயர்த்தவேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான தலையீட்டையும் சர்க்கார் தடுக்குமா என்று, நான் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன் ? "

THE HON SRI K. RAJARAM :—" That will be only in the nature of advice. Panchayat boards will be advised to increase the taxes to the extent necessary to meet the expenditure."

SRI K. VINAYAKAM :—" When were elections held to this Panchayat Board? Is the enhancement of taxes due to any change in the party in power in the panchayat or, in other words, is there any political affiliation behind this move to increase the taxes? "

THE HON. SRI K. RAJARAM :—" A separate question may be put."

SRI M. KALYANASUNDARAM :—" பஞ்சாயத்துப் போர்டு செலவைப் பற்றிய கவலை இருப்பதால் தான் அப்படி யோசனை சொல்வதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆனால் சில பஞ்சாயத்து போர்டுகளுடைய அனுபவத்திலிருந்து தான் நான் சொல்லுகிறேன். கனம் மந்திரி அவர்கள் சொல்வது போல பஞ்சாயத்துப் போர்டின் செலவில் அக்கறை கொண்டு அவர்கள் அம்மாதிரி செய்யவில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் பஞ்சாயத்துப் போர்டு நிர்வாகத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்தைக் கொண்டே தலையிடுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இது உண்மையா, இல்லையா என்று கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ? "

24th February 1954]

THE HON. SRI K. RAJARAM :—" It is not so."

SRI V. BALAKRISHNAN :—" Are the increased taxes in conformity with the standard rates prevailing in other parts of the Madras State? "

THE HON. SRI K. RAJARAM :—" Yes, Sir."

SRI V. R. KRISHNA AYYAR :—" The increased tax is sometimes as much as ten or fifteen times the original rate. One of the conditions to be fulfilled before filing an appeal is that the taxes levied must be paid. On account of the extreme poverty of the traders there, will the Government consider the waiving of this condition so that the persons who have got a grievance may file an appeal without making the payment? "

THE HON. SRI K. RAJARAM :—" After the receipt of the report of the Inspector of Local Boards, the Government will consider the question."

SRI T. S. ARDHANARI:—" மக்களின்மேல் சர்க்கார் நேரிடையாக வரி போடுவதற்குப் பயந்து கொண்டே இம்மாதிரி பஞ்சாயத்து போர்டுகள் மூலம் அதிக வரி போடுகிறது என்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். இம்மாதிரி மறைமுகமாக அதிக வரி போடுவதற்காகவே சர்க்கார் பஞ்சாயத்து போர்டுகளைப் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று ஜனங்கள் சொல்வதை கனம் மந்திரி அவர்கள் மறுக்க முடியுமா ? "

THE HON. SRI K. RAJARAM :—" The Government will not be afraid of levying any tax if it is necessary."

SRI C. H. KANARAN :—" By how many times the original rate were the taxes increased? "

THE HON. SRI K. RAJARAM :—" I do not know. A separate question may be put."

SRI K. MADHAVAN NAMBIAR:—" മററു വല്ല പഞ്ചായത്തു ബോർഡുകളിൽനിന്നും ഇത്തരം വല്ല ആക്ഷേപങ്ങളും കിട്ടിയിട്ടുണ്ടോ ? "

THE HON. SRI K. RAJARAM :—" Not many."

MR. SPEAKER :—" Question No. 6."

SRI K. VINAYAKAM :—" Sir, I want to put a supplementary question. There are only three questions for to-day."

MR. SPEAKER :—" I have allowed enough number of supplementary questions. Simply because there are only three questions, it does not follow that I should allow fifteen or twenty minutes for each question."

Opening of an Oil Technological Institute.

* 6 *Q.*—SRI K. R. VISWANATHAN (on behalf of Sri K. Aranganathan) : Will the Hon. the Minister for Industries and Labour be pleased to state—

(*a*) whether there is any Government Oil Technological Institute in the State; and

[24th February 1954

(*b*) if not, whether the Government have any proposal to open **one at least** in this State?

THE HON. DR. U. KRISHNA RAO :—" (*a*) & (*b*) No Sir."

SRI V. R. NAGARAJAN :—" May I suggest to the Hon. Minister whether we cannot consider the opening of one such institute, preferably in South Arcot district? "

MR. SPEAKER :—" It is a suggestion and not a question."

THE HON. DR. U. KRISHNA RAO :—" Financial stringency seems to stand in the way of opening one such institute. When we decide upon an institute, the question of location can be gone into. Perhaps the hon. Member will put in his suggestion then and we shall consider it."

SRI K. PARTHASARATHY :—" There is an Oil Technological Institute in Anantapur. Are the people of this State given the facility of taking advantage of that Institute and, if not, will the Government enter into an agreement with the Andhra Government for the provision of the facility? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" Anantapur Technological Institute was for the composite State, and there were twelve students in it from both the States, the residuary and the Andhra States. The suggestion of the hon. Member will be considered, but I cannot give an off-hand answer. The matter will have to be taken up at a higher level."

SRI S. RAMALINGAM :—" தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள சில தனிப்பட்ட நபர்கள் இம்மாதிரியான ஒரு எண்ணெய் டெக்னலாஜிகல் இன்ஸ்டிட்யூட்டை ஏற்படுத்துவதற்கு முன் வந்தால் அதற்கு வேண்டிய நிதி உதவியை சர்க்கார் அவர்களுக்கு அளிக்குமா ? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" I am afraid I cannot give an assurance on the question of finance. Short of finance, any help that I can give is at the disposal of the hon. Members from South Arcot."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" In view of the fact that Malabar produces a large quantity of coconut oil, will the Hon. Minister consider the feasibility of opening an oil technological institute in Malabar? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" The answer that I gave to the supplementary question of Sri V. R. Nagarajan will apply to this question also. When finances are available, we shall consider the question of location. Then the suggestion of the hon. Member will be looked into."

SRI K. VINAYAKAM :—" Since the Oil Technological Institute intended for the entire composite State is now in the Andhra area and as there are no similar institutes in the residuary Madras State, will this Government contact the Andhra Government and get the benefit of the use of that institute for the students of the

24th February 1954]

Madras State also, especially when we are giving such a facility to the students of the Andhra State in the King Institute, Guindy, and some other institutions in the Madras State?"

THE HON. DR. U. KRISHNA RAO :—"When partition took place, it was agreed that certain institutions should be treated as common institutions for the purpose of training students and the legislature also agreed to it. I am not sure whether this is one of such institutions. I shall look into the suggestion."

SRI K. M. SEETHI SAHIB :—"May I know whether the Government considered the desirability of starting an oil technological institute in the recent past?"

THE HON. DR. U. KRISHNA RAO :—"All such desires are of course modified by financial stringency. But for financial stringency, we can agree to the hon. Member's suggestion."

SRI A. GOVINDASAMY NAYAGAR :—"இம்மாதிரி எண்ணெய் டெக்னலாஜிகல் இன்ஸ்டிட்யூட்டை ஏற்படுத்துவதற்கு ஐந்தாண்டு திட்டத்தில் எதாவது இடமிருக்கிறதா ?"

THE HON. DR. U. KRISHNA RAO :—"I do not think there is any provision for it."

SRI V. R. KRISHNA AYYAR :—"Sir, in view of the vast oil-seed potentialities of our State, may I know what exactly are the financial implications and whether they are so forbidding as to outweigh the possible advantages that we may get by opening such an institute?" 11-10 a.m.

THE HON. DR. U. KRISHNA RAO :—"The Andhra State was formed on the 1st of October 1953. We have got to examine what exactly are the possibilities. An institute of this type will cost Rs. 10 lakhs at least."

SRI S. DEIVASIGAMANY :—"Sir, are there any American or any other foreign oil experts in the State of Madras?"

THE HON. DR. U. KRISHNA RAO :—"A separate question may be put. If the hon. Member knows of any expert, he may communicate his name to me."

Ceramic factories in the State.

* 7 *Q.*—SRI K. R. VISWANATHAN (on behalf of Sri K. Aranganathan) : Will the Hon. the Minister for Industries and Labour be pleased to state the number of ceramic factories managed by the Government in the Composite and the Residuary Madras State?

THE HON. DR. U. KRISHNA RAO :—"There was a Ceramic Factory in the Composite State at Gudur, now included in the Andhra State. There is no Ceramic Factory in Madras State."

SRI V. R. KRISHNA AYYAR :—"Sir, in view of the fact that in North Malabar and South Kanara we have got clay which is very suitable for ceramic factories, may I ask the Government

[24th February 1954

to start one factory in North Malabar or South Kanara, particularly because the proprietor of the ceramic factory there is on the rocks? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" Sir, I have seen the ceramic factory the hon. Member refers to. But the clay available there, I am told, is neither of the superior variety nor available in sufficient quantity. I can tell the hon. Member that at Neyveli (South Arcot) we are getting very good clay. When the Neyveli Scheme is completed, there is every possibility that the clay there, which is very suitable for making ceramics will enable the opening of a ceramic factory. This question will be considered when the Neyveli Scheme is completed."

SRI M. S. MOGRAL :—" May I know, Sir, whether the Government have given financial aid to any ceramic factories run by private individuals in this State? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" Notice."

SRI R. V. SWAMINATHAN :—" May I ask the Hon. Minister, Sir, whether the Government will consider the desirability of opening a ceramic factory in Tamilnad and may I also tell the Hon. Minister that there are ample facilities and scope for a ceramic factory in Manamadurai in Ramanathapuram district? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" Sir, I am not aware of the availability of suitable clay in the area suggested by the hon. Member. I thought Neyveli was in Tamilnad, and therefore Tamilnad would be satisfied if a ceramic factory was opened therein. If the Neyveli Scheme works successfully, we shall have a first class ceramic factory there."

SRI K. VINAYAKAM :—" Are the Government aware, Sir, that the Stoneware Pipe Construction Company in Tiruvellore applied to the Government of the day some three years ago for financial aid for starting a ceramic factory and the then Government could not come forward to give them aid? Will the present Government take up this issue, if an application should come from the Stoneware Pipe Company for the starting of this factory in Tiruvellore? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" All industries, if they want any help from Government, have got to put in an application. That will be considered by the Board of Industries if the amount of aid sought is less than Rs. 50,000 and by the Industrial Corporation if the aid sought is more than Rs. 50,000. On the recommendations of the board, the Government will come to a decision whether any financial aid can be given, to those who seek help up to Rs. 50,000."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, the Hon. Minister in answer to a supplementary question stated that the clay used in the ceramic factories in North Malabar was not of a

24th February 1954]

superior quality. Will the Hon. Minister be pleased to state the source of his information? As one coming from that place, I can say that the quality of the clay there is not inferior? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" I take the information from the hon. Member."

SRI V. R. KRISHNA AYYAR :—" Sir, if the Government are not prepared to start ceramic factories, may I ask the Government to encourage cottage industries dealings in ceramic stuff especially because they have got an expert trained at Government expense but without a job? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" The hon. Member may put this question to my hon. colleague Mr. M. Bhaktavatsalam."

SRI K. VINAYAKAM :—" Sir, instead of awaiting private initiative in the matter of opening ceramic factories and then giving them aid if they apply for it, will the Government be pleased to institute an enquiry, by appointing an expert, to find out the possibilities of opening flourishing ceramic industries in our State? "

THE HON. DR. U. KRISHNA RAO :—" As I have already said, the Government are firmly convinced that Neyveli has got the right type of clay of the purest variety. Therefore, when the Neyveli Scheme is completed, that will be the ideal place to spend money on and open a ceramic factory."

MR. SPEAKER :—" Questions over."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRIVILEGE MOTION *RE* SUPPLY OF GOVERNMENT REPORTS TO OUTSIDE BODIES BEFORE PRESENTATION TO THE HOUSE.

MR. SPEAKER :—" I believe the House will remember that the hon. Member Sri K. P. Gopalan raised a point of order yesterday. The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of a Privilege Motion, which reads as follows :—

' I give notice of the following motion for reference to the Committee of Privileges :—

" The Annual Report of the Public Services Commission for the year 1952–53 with connected memorandum was placed on the table of this House on 23rd February 1954 in accordance with Article 323 (2) of the Constitution. In the Government Order No. 310 of 26th November 1953 it is noted that copies of this report and memorandum have been sent to the Consul for the United States of America, Madras, and Chief of the Exchange and Gift Division of the Library of the Congress, Wäshington, who have nothing to do either with the Government or the legislature of our State. According to the Constitution it was the privilege of the Members of this House to know the contents of the report before any outsider could get. Under these circumstances a definite breach of privilege has occurred and it is moved that the matter be referred to the Committee of Privileges." '

I may tell the House that this is not the first time that this matter has been brought to the notice of this House. If my memory serves me aright, last year such a one hon. Member (I think it is Mr. K. Krishna Rao) brought matter to the notice of the

House during the budget discussion. A question also was put on this matter by Sri Potha Raju last year though that was not about this report but about the Jail Administration Report. That question read as follows :—

'Supply of copies of Jail Administration Reports to foreign Embassies.

656. SRI T. POTHA RAJU: Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) whether the Government have supplied copies of Jail Administration Reports to any foreign Embassies or Counsulates; and

(b) if so, their names and the reasons for such action ?'

"So this is not the first time that this subject has come up. I cannot see how this constitutes a question of privilege at all and how this motion can be admitted as a privilege motion."

11-15 a.m

*** SRI M. KALYANASUNDARAM** :—"கனம் சபாநாயகர்அவர்களே, இந்தப்பிரச்னையை இச்சபை முன்பு கொண்டுவருவது இது முதல் முறை அல்ல என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இதற்கு முன்பே இதே பிரச்னையை இந்தச் சபையில் எழுப்பியவர்களில் நானும் ஒருவன் தான். அவ்விஷயத்தைப்பற்றி நான் ஒரு கேள்வியும் போட்டிருக்கிறேன். அந்தச் சமயத்தில் கனம் சட்ட மந்திரி அவர்கள் அதற்குப் பதில் சொல்லும் போது 'அப்படி அனுப்பினும் கூட அது இந்த உத்திரவில் இனிமேல் குறிப்பிடப்பட மாட்டாது,' என்று சொன்னதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அனேகமாக அந்த ஞாபகம் சரியாக இருக்குமென்றே நான் நினைக்கிறேன். சர்க்கார் உத்திரவு நெ. 3109, 1953-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-நதேதி என்ற முத்திரையோடு இந்த சர்விஸ் கமிஷன் ரிப்போர்ட் சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவே அமெரிக்க தூதுவர் காரியாலத்திற்கும் அனுப்பப்பட்டிருப்பதாகக் கண்டிருக்கிறது. இது வெறும் நிர்வாக அறிக்கை என்று நாம் கொள்ளமுடியாது. சர்க்கார் செய்திருக்கும் சாதனைகளை விளம்பரப்படுத்தும் பிரசார வெளியீடும் இல்லை இது. இது சர்க்காரின் உத்திரவு. சர்க்கார் இலாக்காக்களுக்கு ஆட்கள் பொறுக்கும் முறைகளைபற்றியும், அவர்கள் திறமைகள் எப்படி இருக்கவேண்டுமென்பது பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களின் தரம், பரீட்சையில் கேட்கப்பட்ட வினாக்கள் போன்றவைகளும் இதில் அடங்கியிருக்கின்றன. ஆகவே இது நமது உள் நாட்டு நிர்வாகத்தைப்பற்றியதொரு ரிப்போர்ட்டே தவிர பிரசாரத் தன்மை இதில் சிறிதளவும் இல்லை. சர்விஸ் கமிஷன் அங்கத்தினர்களே இந்திய அரசியல் சட்டப்படி நியமிக்கப்பட்டவர்கள். அரசியல் அமைப்பு 323ம் ஷரத்து, இரண்டாவது பிரிவுப்படி. இவர்கள் தாங்கள் செய்திருக்கும் காரியங்களை எல்லாம் குறிப்பிட்டு ராஜ்யத்தின் தலைவருக்கும், பின்னர் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் சட்டசபை மூலமாக சமர்ப்பிக்க வேண்டும். சட்டசபை அங்கத்தினர்களுக்கு கொடுப்பதற்கு முன்பாக வாஷிங்டனில் உள்ள சர்க்காரின் வெளிநாட்டு இலாகாவின் பிரிவாக உள்ள சென்னை அமெரிக்க கான்ஸலுக்கு கொடுக்கக்கூடாது. முதலில் சட்டசபை அங்கத்தினர்களுக்குத்தான் அளிக்கப்படவேண்டும்."

MR. SPEAKER :—"முதலில் சட்டசபை அங்கத்தினருக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று அரசியல் அமைப்பில் எங்கே இருக்கிறது ?"

*** SRI M. KALYANASUNDARAM** :—"சட்டசபைக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் போதாதா ? சட்டசபைக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னாலேயே சட்டசபைக்குக் கொடுப்பதற்கு முன்பாக வெளியில் யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று தான் அர்த்தம்.

"ஆகவே, நம்முடைய ராஜ்யத்து சர்விஸ் கமிஷன் ரிப்போர்ட்டை அன்னிய நாட்டு தூதுவர் காரியாலயத்திற்கு அனுப்பவேண்டிய அவசியமே

24th February 1954] [Sri M. Kalyanasundaram]

கிடையாது. அவர்களும் இவ்விஷயத்தை அறிந்து கொள்ளவேண்டுமென்று அக்கரை காட்டுவது நியாயமானது அல்ல. அவசியமும் என்ன இருக்கிறது என்றுதான் எனக்குத் தெரியவில்லை. அப்படியே அனுப்பினாலும் இதில் குறிப்பிடவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? மேலும் இந்திய அரசியல் அமைப்பு 323-ம் ஷரத்து இரண்டாம் பிரிவுப்படி சர்விஸ் கமிஷன் தனது 1952–53-ம் வருஷத்திய யாதாஸ்தை ராஜயத்தின் தலைவர் கவர்னரிடம் சமர்ப்பித்ததாகவும், கவர்னரின் பார்வைக்குப்பின் சர்க்கார் உத்திரவு 3109, 1953-ம் வருஷம் நவம்பர் மாதம் 26-ந் தேதி என்ற முத்திரையுடன்கூட இப்பொழுது சட்டசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதும் இதைப் பார்த்தாலேயே தெரியும். ஆகவே இது வெறும் உள்நாட்டு விவகாரம். இதை சட்டசபையில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக அமெரிக்க தூதுவர் காரியாலயத்திற்கு அனுப்பக் கூடாது. ஆதலால் இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்களின் உரிமை பாதிக்கப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். இது நம் நாட்டு சொந்த விவகாரம் என்ற முறையில் இதை வெளிநாட்டு தூதுவர் காரியாலயத்திற்கு அனுப்புவது ரொம்பவும் தப்பு. இது இந்த மாகாணத்தையே காட்டிக்கொடுக்கும் செயலையாகும் என்ற முறையில் இதை வன்மையாக எதிர்க்கிறேன். சபையின் உரிமைகளைப் பாதுகாப்பது சபாநாயகரின் பொறுப்பாகும். இந்த விஷயம் சபையின் உரிமையை பட்டவர்த்தனமாகப் பாதிப்பதாகவே இருக்கிறது."

MR. SPEAKER :—" If it is the Budget speech or Budget Memorandum, I can understand the point. In that case, it should be first placed before this House. But no such thing is mentioned in the Article in the constitution relating to the Reports of the Public Service Commission. Article 323 (2) says that the Government shall only 'cause a copy thereof together with a memorandum explaining, as respects the cases, if any, where the advice of the Commission was not accepted, the reasons for such non-acceptance to be laid before the Legislature of the State'. All that is said there is that the Government should simply place a copy of the Report before the House. It is not said that the House alone has the privilege to have it." 11-20 a.m.

SRI K. VINAYAKAM :—" May I know what is the glamour attached to the American Consul to whom a copy of this Report has been sent? Are similar copies sent to other *Charges d'affaires* or Consuls in the City of Madras?"

MR. SPEAKER :—" On the 18th July 1953 a question was asked in this regard and was answered."

SRI K. VINAYAKAM :—" It was answered, of course. I am asking whether copies of this Report were sent to other Consuls or *Charges de'affaires* or Ambassadors who have got offices in Madras. What was the glamour attached to the American Consul alone?"

SRI R. V. SWAMINATHAN :—" Will the Government give an assurance in this House that in future they will supply copies of such Reports not only to the American Consul but also to the Russian Consul?" (Laughter.)

* SRI M. KALYANASUNDARAM :—"நம்முடைய நண்பர் ஸ்ரீ ஆர். வி. ஸ்வாமி நாதன் அவர்கள் ஒரு பெரிய வெற்றியை அடைந்துவிட்டதாக எண்ணி திருப்தியோடு உட்கார்ந்துகொள்ளுகிறார். அவருக்கு நான் சொல்ல

[Sri M. Kalyanasundaram] [24th February 1954

விரும்புவது, அமெரிக்க கான்ஸலுக்கு அனுப்பியதைப்போல, ரஷ்ய கான்ஸலுக்கும் அனுப்புங்கள் என்று கேட்டுக்கொள்வதற்காக நாங்கள் இந்தப் பிரச்னையை எழுப்பவில்லை. நம் நாட்டின் உள்விவகாரத்தை எந்த நாட்டவருக்கும் தெரிவிக்கக்கூடாது. "அமெரிக்க கான்ஸலுக்கு அனுப்ப வேண்டும்; சோவியத் கான்சலுக்கு அனுப்பக்கூடாது" என்பது ஆர். வி. சாமிநாதனின் அபிப்பிராயம். ஆனால் ரஷ்யக் கான்ஸலாக இருந்தாலும் சரி, அமெரிக்க கான்ஸலாக இருந்தாலும் சரி, எந்த நாட்டு கான்ஸலுக்கும் அனுப்பக்கூடாது என்பதே எனது அபிப்பிராயம் ஆகும் (கை தட்டல்).

"ஆகவே கனம் சபாநாயகர் அவர்களே, நீங்கள் சொல்வதையும் நான் புரிந்துகொண்டேன். பட்ஜெட் போன்றதொரு யாதாஸ்தில்லை இது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் நான் நிச்சயமாகச் சொல்வேன், பட்ஜெட்டைப் போலவே இது மிகவும் முக்கியமானதாகும். மற்ற சாதாரண ரிப்போர்ட்டுக்களைப்போன்றதொரு சாதாரண ரிப்போர்ட்டும் இல்லை இது. இது நமது உள்நாட்டு விவகாரம். சர்விஸ் கமிஷன் ராஜ்யத்தின் தலைவருக்கு அனுப்பி, பின்னர் சர்க்காரின் கடிதத்தோடு சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஒரு அறிக்கை. ஆகவே முதலில் சட்டசபை அங்கத்தினர்களுக்குத்தான் இதை ஆலோசனை செய்வதற்கு உரிமை உண்டு. பட்ஜெட் காப்பிகள் போன்றவைகளை பணம் கொடுத்து வெளியில் வாங்கலாம். ஆனால் இந்த சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டை அரசாங்கத்திற்கு எழுதி அனுமதி பெற்றுத்தான் பெறமுடியுமே தவிர வெளியில் வாங்க முடியாது."

Mr. SPEAKER :—"இதன் காப்பி வெளியிலும் கிடைக்கும்."

* **Sri M. KALYANASUNDARAM** :—"கிடைக்குமென்பதாக தாங்கள் அபிப்பிராயபடலாம். ஆனால் இந்த அறிக்கையைப் பார்க்கும்போது அதில் அப்படி ஒன்றும் இல்லை. இது பிரசாரத் தன்மை வாய்ந்த அறிக்கை இல்லை. நிர்வாகம் சம்பந்தப்பட்ட அறிக்கை. ஆகவே இதை சபையில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக வாஷிங்டனிலுள்ள ஒரு சர்க்காரின் அயல் நாட்டு தூதுவராக சென்னையில் இருக்கும் அதிகாரிக்கு அனுப்பி வைத்தது இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களின் உரிமையை, பொறுப்பை பறிப்பது போலத்தான் ஆகும். ஆகவே இதைப்பற்றி விசாரிக்க உடனடியாக ஒரு உரிமைக் கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்."

Sri K. P. GOPALAN :—"Sir, according to the Government Order the Report relates to internal administration. It cannot be sent to any foreign embassy."

* **The Hon. Sri C. SUBRAMANIAM** :—"The point for consideration is whether there is a breach of privilege as far as this House is concerned. The question whether it is proper or improper to supply copies of such Reports to foreign embassies is quite a different thing as far as this House is concerned. Now, breach of privilege of the House can arise only if this House is entitled to receive any information on any subject for the first time, that is, before anybody else gets that information. In that case only, if any information has been supplied to anybody else without that information being first supplied to this House, there will be a question of privilege which the Hon. Speaker will have to consider. But this is a Report copies of which, even according to the arguments put forward by the hon. Gentleman Sri Kalyanasundaram, should be supplied to the various departments of Government.

24th February 1954] [Sri C. Subramaniam]

Therefore, that Report could be circulated and, in fact, it has already appeared in the newspapers also. It may, therefore, be taken that it has been supplied to the public. In these circumstances, there is no question of breach of privilege as far as this House is concerned, because it is not necessary that this Report should first be placed on the table of this House and then only supplied to others.

The next question is whether we should supply copies of such Reports to foreign embassies or not. It is under a reciprocal arrangement as between two Governments that we supply such information. If some Governments are not prepared to disclose their Administration Reports and what is going on in their own countries, we cannot help it. But if some countries come forward and say that they will exchange information, we shall only be too glad to be guided by what is happening in other places and to supply to others also information about what is happening in our State. Therefore, it is simply a question of reciprocal arrangement that is involved here.

"As far as the suggestion of my hon. Friend Sri Swaminathan is concerned, if Russia is really interested in getting this information and supplies similar information to us, certainly the question will be considered. But that question does not arise now. There is no question of even propriety involved in this matter. We are doing the most proper thing with reference to international affairs and we are guided by the conventions that have already been laid down. Therefore, there is no breach of propriety even, in this case."

MR. SPEAKER :—"A small correction I want to make in regard to what the Hon. the Finance Minister has said. He said that it is not necessary that the Report should first be placed on the table of this House. A distinction list has to be made between such reports and Reports of the Committee of the House. If it is a Report of a Committee of this House, it should first be placed on the table of this House. In other words, this House should be given priority in regard to supply of that Report. But, in the present case, it is not a Report of this House or of a Committee appointed by this House. Nothing is mentioned in the Article of the Constitution referred to to show that this House shall have priority in the matter of supply of copies of the Report. So, no *prima facie* case has been made out."

III.—ADJOURNMENT MOTIONS RE..

MR. SPEAKER :—"A number of adjournment motions have been given notice of by certain hon. Members. As a general rule, during the discussion on the Governor's Address or during the general discussion on the Budget, adjournment motions are not admitted because hon. Members have an opportunity to ventilate their grievances, whatever they may be, before the House during such

[Mr. Speaker] [24th February 1954 K

discussion. Secondly, I must tell the House that lock-outs and strikes generally cannot properly form subject-matters of adjournment motions.

"Hon. Members Sri K. P. Gopalan, Sri P. K. Gopalakrishnan and Sri T. C. Narayanan Nambiar have given notice of adjournment motions about strikes. I will read them one by one and give my ruling in regard to all of them together. The adjournment motion given notice of by the hon. Member Sri T. C. Narayanan Nambiar reads as follows :—

'This House stands adjourned to discuss an urgent matter of public importance, viz., the failure of the Government to take suitable and timely action on the repeated representations made to the Government by the local M.L.A. and M.P. the Workers' Union of Pappinisseri Aaron Spinning and Weaving Mills, North Malabar, the Citizens Committee to defend the industry and workers and the public organizations of Malabar, inviting the urgent attention and timely action of the Government to prevent collapse and ruin of the concern inasmuch as the Factories Act being violated, the Payment of Wages Act nullified, awards not implemented, wages for the workers and taxes to the Government not paid, etc. But it was due to callous neglect of the Government that the mills were closed with effect from 12th January 1954 inasmuch as stocks were piled up for want of market and financial aid or loan from the Government resulting in the unemployment of 1,300 workers and distress to thousands of people and also financial loss to Government, workers and shareholders inasmuch as the management had closed the mills which has become insolvent.'

The point is whether there is any other remedy for this? I think the Industrial Disputes Act provides some remedy for this.

11-30 a.m. (1) LOCK-OUT IN RAJAH REDDI FACTORY TALIKULAM BRANCH.

"(1) The motion given notice of by hon. Member Sri P. K. Gopalakrishnan reads as follows :—

'This House stands adjourned to discuss an urgent matter of public importance, viz.,

"the failure of the Government to intervene and reopen Talikulam Branch of the Rajah Beedi Factory, the only factory in famine-stricken Nattika Firka which is locked out from 13th of February onwards thus driving the workers and their families to unemployment and starvation and forcing the 104 workers to resort to stay-in-strike."'

"I am told by the Hon. Minister that this Beedi Factory is not a Government Factory. So, the Government are not responsible for the lock-out.

(2) CLOSURE OF AARON SPINNING AND WEAVING MILLS, UNEMPLOYMENT DUE TO—

"(2) The adjournment motion of the hon. Member Sri K. P. Gopalan reads as follows :—

'This Assembly stands adjourned to discuss an urgent matter of public importance, namely the sudden, uninformed and illegal closure of the Pappiniserri Aaron Spinning and Weaving Mills, Pappiniseri, Malabar, on 12th January 1954 violating the Industrial Disputes Act and Factories Act and throwing away 1,300 workers and their families on the streets and refusal of the management to pay about Rs. 2 lakhs to the workers as arrears of wages violating the Payment of Wages Act and the failure of the Governmnet to take effective steps to save the workers from this calamity and to enforce even the existing trade union laws on the management and to give relief to the workers and their families who are starving amongst the people causing anxiety and also in not taking effective measures to see that the mill is opened.'

This motion is the same as the one given notice of by the hon. Member Sri T. C. Narayanan Nambiar."

All these three adjournment motions are out of order.

24th February 1954] [Mr. Speaker]

(3) Arrest of workers of the Mohanram Weaving Mills and Kothandaram Spinning Mills, Madurai.

"(3) Hon. Member Sri M. Kalyanasundaram has given notice of another adjournment motion. It reads as follows :—

'This House stands adjourned to discuss an urgent matter of public importance, viz.,

"the Government's action in ordering the arrest of the workers of the Mohanram Weaving Mills and Kothandaram Spinning Mills, Madurai, who were agitating against the illegal closure of the Mills."'

If those workers are arrested, there is the remedy in a Court of Law. I am not able to understand how this is a matter of urgent public importance."

* SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, மற்ற கனம் அங்கத்தினர்கள் கொடுத்த ஒத்திவைப்புப் பிரேரணைகளைப்பற்றி தாங்கள் குறிப்பிடும்போது, 'அதில் சர்க்காருக்கு நேரடியான பொறுப்பு இல்லை' என்று தாங்கள் அபிப்பிராயப்பட்டீர்கள். ஆனால், நான் கொடுத்த ஒத்திவைப்புப் பிரேரணையைப் பொறுத்தவரையில் 'சர்க்காருக்கு அதில் நேரடியான பொறுப்பு இருக்கிறது. குறிப்பிடப்பட்ட மில்கள் மூடப்பட்டதற்கு சர்க்கார் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. மூடப்பட்டிருக்கும் மில்கள் திறக்கப்படவேண்டும் என்று தொழிலாளிகள் இளர்ச்சி செய்கிறார்கள். தொழிலாளிகள் அமைதியான முறையில், அந்த மில்களுக்கு முன்பாக நின்று மறியல் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கைது செய்யப்படுவதன் மூலம் அந்த மில்கள் மூடப்பட்டிருப்பதற்கு அரசாங்கம் முதலாளிகளுக்கு ஒரு தைரியத்தைக்கொடுக்கிறது. இந்தக் கொள்கை தொடர்ந்து நடக்குமேயானால், இன்னும் பல மில்கள் மூடப்படலாம். அதனால், ஏற்கனவே இருந்த வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகரிக்கும். ஆகையால், இது ஏதோ ஒரு சில தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையென்றும், கைது செய்யப்பட்ட தொழிலாளிகளை விடுதலை செய்யவேண்டும் என்பதற்காக இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை நான் கொண்டுவந்திருப்பதாகவும் தாங்கள் கருதக்கூடாது. சர்க்காருடைய கொள்கையில் ஆபத்து இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க இந்தச் சபையின் அலுவலகளை அரை மணி நேரம் ஒத்திவைத்து, இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்றும், அதற்குத் தாங்கள் இணங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்."

MR. SPEAKER :—" I am sorry I am not able to concede the request of the hon. Member. We must follow certain rules. It is not a question of friendship. I must be just to all hon. Members alike. In this case, the hon. Member's adjournment motion is clearly out of order.

"Now, let us resume the discussion on the Governor's Address."

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

* SRI U. MUTHURAMALINGA THEVAR :—" கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை ராஜ்யத்திலிருந்து ஆந்திர மாகாணம் பிரிந்து போன பிற்பாடு முதன் முறையாக எஞ்சியுள்ள இந்த ராஜ்யத்தின் இரு சபைகளையும் கூட்டிவைத்து தனது பேருரையை நிகழ்த்திய கவர்னர் அவர்கள் தனது பிரசங்கத்தில் இந்தச் சர்க்கார் சாதித்திருக்கும் காரியங்களையும், சாதிக்கப் போகும் காரியங்களையும் தனது ராஜ தந்திர பாஷையில், மறைப்பதை மறைத்து, ஒளிப்பதை ஒளித்து தோல்வியையும் வெற்றியாக மற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் பேசியதை நாம் எல்லோரும் கேட்டோம். 11-33 a m.

[Sri U. Muthuramalinga Thevar] [24th February 1954

"அவர் தனதுரையில் ஆந்திர ராஜ்யம் சுமுகமான முறையில், சௌஜன்யமான முறையில் பிரிந்துவிட்டதாக மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ளும்போது, ஆந்திர ராஜ்யத்தோடு சித்தூர் தமிழ் பிரதேசங்களையும் சேர்த்து விட்டார்களே என மனம் கொதித்துக்கொண்டிருப்போர்களுக்கு ஆறுதலைக் கக்கூடியவகையில் அந்தத் தமிழ் பிரதேசங்களை திரும்பவும் தமிழ் நாட்டுடன் சேர்க்க ஆந்திர சர்க்காருடன் இந்தச் சர்க்கார் சமரச முறையில் பேசி ஒரு முடிவுகாண எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருப்பதாக அனுதாபத்தோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"ஆந்திர மாகாணம் அமைதியான முறையில், சுமுகமான முறையில் வந்துவிட்டதாக கவர்னர்பிரான் மகிழ்ச்சியுற்றாரே. உண்மையில் அமைதியான முறையிலா வந்தது? சுமுகமான முறையில் வருவதற்குத்தான் இவர்கள் உதவினார்களா? இருதரப்பார்களும் விட்டுக்கொடுக்கும் மனோபாவத்தோடு இப்பிரச்னையை எங்கே அணுகினார்கள் என்று நான் கேட்கின்றேன். மொழிவழியாக ராஜ்யங்களை அமைக்கவேண்டுமென்ற கொள்கை ஏற்கெனவே அஹிம்சாவாதிகளாகிய காங்கிரஸ்காரர்களால் அங்கீகரிக்கப்பட்டதானே? அதன் வழிப்படி தானே இவர்கள் பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளை அமைத்தார்கள். அப்படியிருக்க தெலுங்கு பேசும் ஆந்திர மக்கள் ஆந்திர ராஜ்யம் வேண்டுமென்று கேட்டபோது காலாகாலத்தில், பலாத்கார முறைகள் கையாளப்படுவதற்கு முன்னால், தடியடி தர்பாரும், துப்பாக்கிப் பிரயோகமும் நடப்பதற்கு முன்னால், சாகும்வரையில் உணவுவிரதமிருந்து தியாகி பொட்டி ஸ்ரீராமுலு பிராணத்தியாகம் செய்துகொள்வதற்கு முன்னால், அதைத் தொடர்ந்து நாட்டில் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் சிறைபுகுமுன்னால் (அவர்களை எல்லாம் குற்றவாளிகள் எனச் சிறையில் அடைத்தது போலவே அவர்களை எல்லாம் தியாகிகள் என்று செல்லி சிறையிலிருந்து பூமாலைபோட்டு விடுதலை செய்வதையும் நாம் இப்பொழுது பார்த்தோம்) தெலுங்குபேசும் பிரதேசங்களை ஒன்றுகூடி ஆந்திரமாகாணத்தைக் கொடுத்தார்களா? இந்த அஹிம்சாவாதிகள், பலாத்கார விரோதிகள் கடைசியிலாவது சத்தியத்திற்குக் கட்டுப்பட்டார்களா? இல்லையே. பலாத்காரத்திற்குத்தானே அடிபணிந்தார்கள். இப்படி புனித காந்திய வாழ்வையே, பலாத்காரத்தை உபயோகித்து பலாத்காரத்திற்கு அடிபணிந்து, மாசுபடுத்திவிட்டதை வருங்காலச்சந்ததியார் சரித்திரத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளாமலா இருக்கப்போகிறார்கள்.

"ஆந்திர மக்களது நியாயமான கோரிக்கைகளையும் புறக்கணிக்க, அவ்வப்போது ஏதாவது காரணம் காட்டி முட்டுக்கட்டைப்போட்டுக்கொண்டே காலம் கடத்தி வந்து கடைசியில் தமிழர்களுக்கும், ஆந்திரர்களுக்கும் பகைமையுணர்ச்சி வளரும்படி, சண்டையும் மனக்கசப்பும் ஏற்படும்படி செய்து பலாத்காரம் உச்சநிலையை அடைந்தபிறகு இனிமேல் ஆந்திர ராஜ்யம் கொடுக்காவிட்டால் இந்த ராஜ்யமே அழிந்துவிடுமென்ற நிலைமையில் தங்கள் உயிர் தொண்டாங்குழிக்கு வந்ததினாலே மரணவஸ்தை தாளமாட்டாமல் அவசரம் அவசரமாக அள்ளித்தெளித்த கோலத்தைப் போல ஆந்திர மாகாணத்தை அமைத்தார்கள். அப்பொழுதாவது எல்லாமொழிவாரி மாகாணங்களையும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தார்களா? ஆந்திரமாகாணத்தை மாத்திரம் தாற்காலிக ஏற்பாடாக வைத்து அவசரம் அவசரமாக பிரித்ததினால் இந்த இரு ராஜ்யங்களுக்குமிடையே நீடித்த சுமுகமான உறவு நிலைக்கவேண்டியதற்குப் பதிலாக பகைமை உணர்ச்சியே இன்றையதினம் வளர்ந்திருக்கிறது. பிரிவினையில் இவர்கள் செய்திருக்கும் தவறுகள் எல்லாவற்றிலும் சிகரமானது சித்தூர் ஜில்லாவிலுள்ள தமிழ் பிரதேசங்களையும் ஒரேயடியாக ஆந்திரமாகாணத்தோடு யாரையும் கேளாமல், எவருடைய யோசனையும் கேளாமல் சேரும்படி அறிவித்தது. அதனால் எவ்வளவோ கொந்தளிப்புகள், எவ்வளவோ கிளர்ச்சிகள் நாட்டில் நடந்திருக்கின்றன. இந்தக் கிளர்ச்சிகள் ஏற்பட்ட பின்னாவது சர்க்கார் நேர்மையான கண்ணோட்டத்தோடு இந்தப்பிரச்னையை அணுகிற்று என்றால் இல்லை என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. தாயகத்தோடு சேரவேண்டுமென்று நியாயமான முறையில் தமிழர்கள் செய்த கிளர்ச்சியை முட்டாள்தனமானது என்று, தானே அறிவாளி என எண்ணிக்கொண்டிருக்கும் இந்திய முதல் அமைச்சர் சொல்லுகிறார். நம்

24th February 1954] [Sri U. Muthuramalinga Thevar]

ராஜ்யத்திலும் தானே அறிவாளி என எண்ணிக்கொண்டிருக்கும் முதலமைச்சர் இப்பொழுது கிளர்ச்சி செய்ய அவசியம் இல்லை, எல்லைக் கமிஷன் வரும்போது இவைகள் சுமுகமாக தீர்க்கப்படுமென்று வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் இவர் அளித்த வாக்குறுதி என்னவாயிற்று ? இவர் தான் தீர்க்கதரிசனம் வாய்ந்தவராயிற்றே. எல்லைக் கமிஷன் ஏற்பட்டாலும் இந்தப் பிரச்னையைப்பற்றி அது விசாரிக்குமா, விசாரிக்காதா என்று அப்பொழுதே இவருக்குத் தெரிந்திருக்கவேண்டாமா ? தெரிந்திருந்தால் அன்றையதினம் கிளர்ச்சி செய்த தமிழ் மக்களுக்கு எல்லைக் கமிஷன் விசாரணை செய்யும். ஆகவே, உங்கள் நடவடிக்கைகளை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருப்பாரா ? அப்படிச் சொன்னார்களென்றால் தெரிந்தும் மக்களை ஏமாற்றுவதற்காகவே இந்த சத்தியசந்தர் அவ்வாறு சொல்லியிருப்பார் என்றுதானே நாம் கொள்ளவேண்டியிருக்கிறது. பட்டவர்த்தனமாக நாட்டு மக்கள் எல்லோருக்கும் எல்லைக் கமிஷன் இப்பிரச்னை பற்றி விசாரணை நடத்தாது என்று தெரிந்துபோன பிற்பாடு 'ஆந்திர சர்க்காரோடு பேசிக்கலந்த இவ்விஷயத்தில் நியாயமான ஒரு முடிவுக்கு இந்தச் சர்க்கார் சீக்கிரமே வரும்' என்பதாக இன்றையதினம் கவர்னர்பிரான் தனது உரையில் சொல்லுகின்றார்.

"அவரிடத்திலிருந்து நாம் அந்தச் சமாசாரத்தை எதிர்ப்பார்க்கவேயில்லை. சித்தூர் பிராந்தியம் ஒன்று தமிழ்நாட்டோடு சேர்க்கப்படவேண்டும் அல்லது அந்தப் பிரச்னைக்கே இடமில்லாத நிலைமையில் அப்பிரதேசங்கள் ஆந்திரத்தோடு சேர்க்கப்பட்டுவிட்டது என்றாவது அறிவிக்கவேண்டும். இந்த இரண்டில் ஒன்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுவிடுமேயானால் பலருடைய கஷ்டங்களும், நஷ்டங்களும், மனக்கசப்பும், சச்சரவுகளும் நீங்குவதற்காவது ஒரு வழியேற்படும். அதுவுமில்லை. ஆந்திர சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகச் சொல்லுகிறார்கள். ஆந்திர சர்க்காரோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி இந்தச் சர்க்கார் அவ்விஷயத்தில் வெற்றி காணுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் இல்லை. சித்தூர் இல்லா மக்களுக்கும் கொஞ்சம்கூட இருக்குமென்றும் நாங்கள் எண்ணவில்லை. ஆந்திரர்களை ஒரு நேர்மையான உடன்பாட்டுக்குப் பணியச் செய்யக்கூடிய வலுவு, உறுதி, முதுகெலும்பில்லாத இந்தச்சர்க்காரிடம் கொஞ்சம்கூட இருக்கும் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை. கடந்தகால நிகழ்ச்சிகளும் இதைத்தான் ஊர்ஜிதம் செய்கின்றன. அமைக்கப்பட்டிருக்கும் எல்லைக் கமிஷன் ஏதோ சாதித்துவிடப்போவதாக இன்னமும் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லைக் கமிஷன் தனது பரிசீலனையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே சித்தூர் பகுதிகளில் என்ன நடக்கிறது என்று பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அங்கேயுள்ள தமிழ் போர்டுகள் எல்லாம் தெலுங்கிலே மாற்றப்பட்டு வருகின்றன. தமிழ் பள்ளிக்கூடங்கள் எல்லாம் தெலுங்கு பள்ளிக்கூடங்களாக மாற்றப்பட்டுவிட்டன. அந்தத் தமிழ் பிரதேசங்களை ஒரேயடியாக தெலுங்கு பிரதேசங்களாக மாற்றுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்றுவிட்டன என்பதை நான் உங்களுக்கு எல்லாம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சத்தியத்தின்போரால், அஹிம்சையின்போரால் ஆட்சி செலுத்துகிறோம் என்று பறைசாற்றிக்கொள்ளுகிறார்களே அந்த காங்கிரஸ் வர்க்கத்தில் வந்தவர்கள்தான் அங்கேயும் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

11-40 a.m.

"தர்மத்திற்காக, நியாயத்திற்காக, தமிழகத்தோடு தங்கள் தாயகம் சேர்ந்திருக்கவேணடுமென்பதற்காக நியாயமான முறையில் கிளர்ச்சி செய்கின்ற தமிழ் மக்களுக்கு இந்தச் சர்க்கார் அதனை ஆளுகின்ற இந்த புண்யாத்மாக்கள் உதவி செய்யாவிட்டாலும், ஊக்கமளிக்காவிட்டாலும் அவர்கள் செய்யும் காரியங்களையாவது மக்கள் உள்ளத்தில் விஷமாகத் தோன்றும்படி தப்பான பிராசாரம் செய்யாமலாவது இருக்கிறார்களோ என்றால் அதுவுமில்லை. இந்த தர்மாத்மாக்களை, அஹிம்ஸா மூர்த்திகளை, சத்திய நெறியில் வாழ்கிறோம் என்று பித்தலாட்டமே செய்து வரும் புண்ணியவான்களை மிகத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri U. Muthuramalinga Thevar] [24th February 1954

(At this stage the Deputy Speaker occupied the Chair.)

"ஆந்திரர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே அவிந்துபோகக்கூடிய நிலைமையில் இருக்கும், சாம்பல் பூத்துப் போய் கிடக்கும் நெருப்புபோன்ற பகைமை உணர்ச்சியை, பழைய அறுவருப்பு உணர்ச்சியை மறுபடியும் ஊதிவிடாமல், விசிறி விடாமல் ஒரேடியாக இவ்விஷயத்தையே இளப்பாதவாறு இருந்துவிடுங்கள். அதுதான் இந்த நாட்டிற்கும் நல்லது, உங்களுக்கும் நல்லது என்று சொல்லிக்கொண்டு அஹிம்சையையும், சத்தியத்தையுமே கடைப்பிடிப்பதாக சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் வாதிகளே, நேர்மையற்ற முறையில், நீதியற்ற தன்மையில் இந்த நாட்டிலிருந்தே அஹிம்சையையும், சத்தியத்தையும் விடாமல் கொஞ்சம் கிருபை சாதியுங்கள் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அதற்கடுத்தாற்போல கவர்னர்பிரான் இவ்வாண்டு நல்ல மழை பெய்திருப்பதாகவும், உணவுப்பொருளுக்கள் அதிகம் உற்பத்தியாயிருப்பதாகவும் மகிழ்ச்சி ததும்பப் பேசியிருக்கிறார். மழை கொஞ்சம் பெய்தது என்பது எண்ணவோ வாஸ்தவம். ஆனால் இந்த நாட்டிலுள்ள விவசாயிகளின் உண்மையான நிலவரம் என்ன? எங்குபார்த்தாலும் பூச்சிகள் விழுந்து பயிர்கள் சர்வநாசம் அடைந்துவிட்டன. அறுத்துப்போட்ட கண்டு முதல் செய்திருக்கும் பல விவசாயிகள் அளந்து பார்க்கும்போது தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள். சொல்லமுடியாத சேதமும் அதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் அல்லலும், தொந்தரவும் இந்தச் சர்க்காருக்குத் தெரியாதா? தெரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பியிருந்தால் இவைகள் அவர்கள் கவனத்திற்குத்தான் வந்திருக்காதா? பஞ்சப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்து தேவையான இடங்களுக்கெல்லாம் வரிவிலா செய்யப்படுமென்ற தோரணையில் இந்தச் சர்க்காரால் முன்பு நம்பிக்கை அளிக்கப்பட்டது. அதன்பேரில் பஞ்சப் பிரதேசங்களை எல்லாம் ரெவினியூ போர்டு மெம்பர்கள் சுற்றிப்பார்த்தார்கள். ஹெஜ்மாடி போன்ற பிரமுகர்கள் அப்பொழுது சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். இல்லை உல்லாசப் பிரயாணம் செய்தார்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்று கேட்டால் அவர்கள் சுற்றிப்பார்த்ததில் என்ன பலன் ஏற்பட்டது? ஆங்காங்கே மந்திரிமார்களும் வந்தார்கள். பஞ்சப்பிரதேசங்களைப் பார்த்து, அங்குள்ள விவசாயிகளைப் பார்த்து அனுதாபம் தெரிவித்துக்கொண்டார்கள். ஆனால் அதன் முடிவு என்னவாயிற்று? 100 ரூபாய்க்கு கீழ் வரி செலுத்தும் விவசாயிகளுக்கு ஏதோ அனுதாபம் காட்டி உதவி கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இதனால் எவ்வளவு பேர்களுக்கு உண்மையில் பலன் ஏற்பட்டது என்று கேட்கிறேன்? 100 ரூபாய்க்கு மேற்பட்ட வரிசெலுத்தும் விவசாயிகள் எல்லோரும் பெரிய தனவந்தர்களா? பொதுவாக இந்தச் சர்க்கார் நாட்டிலுள்ள மக்களை ஏமாற்றும் வகையில், நாட்டிலுள்ள ஜனங்களுக்கும் பொய்யாக நம்பிக்கை அளித்து ஊக்கம் கொடுப்பது போல் பாவனை செய்யும் வகையில், தங்களுக்குத் தெரிந்த சாதுர்யத்தையெல்லாம் காட்டி, "ஏமாற்றுவதிலும் நாங்கள் நாகர்கமாக ஏமாற்றுவோம். இதையாரும் கண்டுபிடிக்க முடியாது" என்று தன்னிறமாப்பு அடையும் தோரணையில் எந்தத் திட்டத்தையும் கொண்டு வருகிறீர்களே தவிர உண்மையில் மக்களின் நலனை எண்ணி, மக்களின் க்ஷேமத்தை எண்ணி, மக்களின் நல்வாழ்வை எண்ணி ஒரு திட்டத்தையும் கொண்டுவரவில்லையென்று நான் உறுதியாகக் கூறமுடியும். ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போராடிய காலத்தில் விவசாயிகளுக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டால் பெரிய நன்மையைச் செய்துவிடப் போகிறோம் என்று ஆசைவார்த்தைகளைக் காட்டி, தொழிலாளிகளுக்குச் சுதந்திரம் வந்தபின்னர் அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நாங்கள் நிறைவேற்றித்தரப் போகிறோம் என்று உறுதிமொழி அளித்து அவர்கள் எல்லோருடைய உதவியையும்கொண்டு அன்னியனை இந்த நாட்டிலிருந்து விரட்டி, வெற்றி அடைந்து வாகை மாலை சூட்டிக்கொண்டு அதிகாரத்துக்கு வந்திருக்கும் இந்தக் காங்கிரஸ் வீரர்கள் அன்றையதினம் தாங்கள் மக்களுக்கு என்ன வாக்குறுதிகளைக் கொடுத்தோம் என்பதை இன்றையதினம் மறந்து, அன்றையதினம் தாங்கள் மக்களுக்கு என்ன உறுதிமொழிகளை அளித்தோம் என்பதை இன்றையதினம் மறந்து மாடுப்பெண்ணாக இருந்தபோது

24th February 1954] [Sri U. Muthuramalinga Thevar]

மாமியாரின் கொடுமைகளுக்கெல்லாம் உள்ளாகி கண்ணீர் உகுத்ததை மறந்து தனக்கு மாமியார் ஸ்தானம் வந்தபிறகு மற்றவர்களையெல்லாம் மாட்டுப்பெண்ணுக எண்ணி தான்பட்ட கொடுமைகளைப்போல பல மடங்கு அதிகமாகக் கொடுமை செய்யும் நிலைக்கு வந்துவிட்டார்கள் என்றால் இதைப் பற்றி மேலும் நான் என்ன சொல்வது என்றுதான் எனக்குத் தெரிய வில்லை. அவர்கள் செய்துவரும் ஒவ்வொரு காரியங்களிலிருந்தும் பல விதமான தீமைகள், தொல்லைகள், அல்லல்கள், சங்கடங்கள் போன்றவை கள் தான் உண்டாகியிருக்கின்றதே தவிர ஒருவிதமான நன்மையும் ஏற்பட வில்லையென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். கடந்தகால காங்கிரஸ் ஆட்சியிலும், தற்காலத்தில் இருந்து கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியி லும் மக்களுக்குத் தொந்தரவுகள்தான் அதிகமாகியிருக்கின்றன.

"அதற்கடுத்தபடியாக இந்தச் சுதந்திரவீரர்கள் தாங்கள் பெற்ற சுதந் திரத்தை நினைவு கூர்ந்து விழாக்கொண்டாடினார்கள். இவ்வாண்டு, ஜனவரி மாதம் 26-ந்தேதி அன்று கொண்டாடப்பட்ட சுதந்திரவிழாவில் இந்த ராஜ்யத்தின் கவர்னர் பெயரால் ஒரு நீசத்தனமான காரியத்தைச் செய் திருக்கிறார்கள். அதாவது சென்னையில் இருக்கப்பட்ட சிலைகளுக்கெல்லாம் பூமாலைகள் போட்டு அலங்கரிக்கச் செய்தார்கள். அந்தச் சிலைகள் பெரும் பாலும் ஆங்கிலேயருடையது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த நாட்டு மக்களை அடிமையாகி, அவர்களுக்குப் பல இன்னல்களை இழைத்து, இந்நாட்டுப் பெண்களை கற்பழித்து அவமானப்படுத்திய அந்த ஆங்கிலேயர் களுடைய சிலைகளுக்கு இந்த அரசாங்கம் அலங்காரம் செய்யச் சொன்னார் கள் என்றுசொன்னால் இது ஒரு சுதந்திர அரசாங்கமா? தன்மான முள்ள அரசாங்கமா என்று தான் நான் கேட்கின்றேன். இது தன் மான முள்ள அரசாங்கமாக இருந்திருந்தால், உண்மையாகவே சுதந்திரத்தில் அபிமானம் கொண்ட அரசாங்கமாக இருந்திருந்தால், நம்மை அடிமை படுத்தி, இழிவுபடுத்திய அன்னியர்களுடைய சிலைகளுக்கு சுதந்திர விழாவின்போது அலங்காரங்கள் செய்திருக்கமாட்டார்கள். அவைகளை யெல்லாம் அவ்விடங்களிலிருந்து பெயர்தெடுத்துக்கொண்டு போய் மியூஸியத்திலே போட்டிருப்பார்கள். அந்தக் காரியத்தைச் செய்யவில்லை, இந்த சுதந்திர வீரர்கள். அவமானச் சின்னமாக சென்னையிலே இருக்கும் சிலைகளுக்கு அலங்கரித்தது இந்தச் சர்க்கார் என்று சொன்னால், இது சுதந்திர சர்க்கார் செய்யக்கூடிய காரியமா? இது மனிதத்தன்மைக்கு ஏற்றதா? தன்மானமுள்ளவர்கள் செய்யக்கூடிய செயலா என்று மட்டும் கேட்டுவிட்டு இது சட்டசபையாக இருப்பதால் வேறு எப்பதத்தை யும் மேற்கொண்டு உபயோகிக்காமல் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

"அதற்கடுத்தாற்போல 'கடன் ஒத்திவைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டோம். விவசாயிகளுக்கு பெரிய நன்மையை இது அளிக்கப் போகிறது' என்பதாக இவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு தாற்காலிக நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் அதேசமயத்தில் மறுபடியும் அவர்கள் கடன்வாங்கு வதற்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கும் பாங்கு வசதிகளை நிறுவு வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா? அப்படிச் செய்திருந் தால் இந்தச் சட்டத்தால் உண்மையான பலன் ஏற்படலாம். அப்படியில்லா மல் இந்தச் சட்டத்தை மாத்திரம் கொண்டுவந்திருப்பதால் ஏற்பட்ட நன்மை இன்றையதினம், விவசாயிகள் கடன் கிடைக்காமல் தெருத்தெருவாக அல்லற்படுவது தான். மேலும் கடன்காரர்களின் தொல்லையிலிருந்து ஒரு வருஷ காலத்திற்குப் பிறகு இவர்களுடைய தானியங்களும், சாமா ன்களும் லேவாதேவிக்காரர்களால் ஜப்தி செய்யப்படும் ஒரு நிலைதான் ஏற்படுமென்று நினைக்கிறேன். ஆகவே அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நிவாரணம் அளிக்க முன் வராத வரையில் அவர்கள் ஒரு நாளும் நிம்மதி யாக வாழமுடியாது.

"விவசாயிகளுக்கு நன்மைசெய்யவேண்டுமென்ற கருத்தோடு விவசாயக் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று ஒரு புறம் பறை சாற்றிக்கொள்ளும் இந்தச் சர்க்கார் மறுபுறம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்றும் பாருங்கள். நெல்லு வெட்டுவதற்காக விவசாயி களுக்குப் பலவிடங்களில் மானியங்கள் கொடுத்தார்கள். ஆனால் அந்த 11-50 a.m.

[Sri U. Muthuramalinga Thevar] [24th February 1954

விவசாயிகள் சரியாக கிணறுகளை வெட்டவில்லையென்ற காரணத்தைச் சொல்லி அவர்களுக்குக் கொடுத்திருக்கும் மானியத்தை திருப்பி வசூல் செய்து வருகிறார்கள். எப்படிப்பட்ட முறையில் வசூலிக்கிறார்கள் என்று பார்ப்பதுதான் முக்கியமானது. இந்தப் புண்ணியாத்மாக்களால் ஆளப் படுகின்ற சர்க்காரின் அதிகாரிகள் அந்தக் கடன்களை மிகவும் கேவலமான முறையில் பலவந்தமான முறையில் விவசாயிகளைத் தொந்தரவு செய்து வசூலித்து வருகிறார்கள். மிகவும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் அந்த ஏழை விவசாயிகளிடம் கொஞ்சம்கூட இரக்கம் காட்டாமல் அவர்கள் பேரில் கோர்ட்டுகளில் கேஸ்கள் போட்டு அவர்களது சொத்துக்களை ஜப்தி செய்து, குழந்தைகுட்டிகளோடு அவர்களை நடுத்தெருவில் நிற்க வைத்திருக் கிறார்கள். இது தான் இந்தச் சர்க்கார் ஏழை மக்களிடம் கொண்டிருக்கும் அனுதாபத்தை விளக்கும் நல்ல காரியமா? வரி வசூலும் இம்முறை யில்தான் நடைபெறுகின்றது.

"'நாட்டிலே மக்கள் உண்ண உணவின்றித் தவிக்கிறார்கள். பல ஏழை கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று நாங்கள் சொன் னால் உடனே அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், 'பட்டினியால் யாருமே இந்த ராஜ்யத்தில் உயிரைவிடவில்லை. இது எதிர்கட்சிகாரர்களின் பொய் பிரசாரங்களில் ஒன்று' என்று உண்மையை ஆராயாமலேயே எங்கள் மேல் சீற்றம் கொள்வது முந்தைய வழக்கம். ஆனால் நேற்றையதினம் கவர் னர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையைப் பிரேரேபித்து முதன் முதலாகப் பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர், தன்னையும் மறந்து, தன் கட்சியையும் மறந்து நாட்டில் வேலையில்லாத்திண் டாட்டம் அதிகரித்து வருவதாயும், பட்டினிச்சாவுகள் ஏற்பட்டுவருவதாயும், கிட்டத்தட்ட நாங்கள் சொல்லும் உண்மையையே ஊர்ஜிதம் செய்யும்வகை யில் பேசினார். அதைக் கேட்டு நான் வியப்பு எய்தினேன். ஆனால் அவர் பேரில் குற்றமில்லை. உள்ளத்திலுள்ளது வெளியில் வராது என்ன செய் யும்? தன் இருதய உணர்ச்சியை யாராலும் மறைக்க முடியாது என்ப தையே அந்தக் காங்கிரஸ் மெம்பரின் பிரசங்கம் நன்கு தெளிவுபடுத்து கிறது. படிப்பின் பெயரால் பொய்மை சாமர்த்தியமாகச் சொல்வது என்பது இனி நடக்காத காரியம். ராஜதந்திரம் (diplomacy) என்றால் என்ன? பெரிய குழப்பமான காலங்களில், நாட்டிலுள்ள குற்றமற்ற மக்களுக்கு துன்பம் ஏற்படாத வகையில், வயதானவர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் அவதிப்படாத வகையில், நாட்டில் நிரந்தர அமைதியும், சமாதானமும் நிலவச் செய்யும் வகையில் இரு பெரிய தேசங்களிடையே ஏற்படவிருக்கும் யுத்தத்தைத் தவிர்ப்பதற்காக உபயோகப்படுத்தும் சாமர்த்தியத்தை ராஜதந் திரம் என்பார்கள். ஆனால் பொய்களுக்கெல்லாம் ராஜதந்திரம்; செய்யும் அநியாயச் செயல்களுக்கு எல்லாம் ராஜதந்திரம் என்று தற்காலத்தில் இவர்கள் சொல்லிச் சொல்லி அந்தப்புனித வார்த்தையையே மாசுபடுத்தி விட்டார்கள். கனம் ஆச்சாரியார் ஆட்சியில் பொய்யெல்லாம் மெய்யாகி வரு கிறது. அநியாயமெல்லாம் நியாயமாகி வருகிறது. எதற்கெடுத்தாலும் கட வுளின் பெயரைச் சொல்லி அதர்மமும், அநியாயமும், அநீதியும் பய மின்றி செய்யப்பட்டு வருகிறதைத்தான் நாம் காண்கிறோம். தப்பைத் தப்பு என்று எடுத்துச் சொல்லும் தலைவனை மோசக்காரன், அநியாயக் காரன் என்று அழைக்கும்படி செய்து வஞ்சகக்காரனை, நீதியற்றவனை, நேர்மையற்றவனை, 'பெரிய தலைவன், சத்தியவான், தீர்க்கத்தரிசி,' என் றெல்லாம் கொண்டாடும்படியாக மக்களை ஏமாற்றிக்கொண்டு வருகிறார் கள். எல்லோரும் அரசியல் வாதிகளாக ஆகிவிடமுடியுமா? 'பலனை எதிர் பார்க்காமலே நாட்டிற்குச் சேவை செய்வது ஒன்றே என் பொறுப்பு' என்றும் உலகை ஏமாற்றிக்கொண்டு வரமுடியுமா என்று நான் கேட்கி றேன். அரசியல் வாதியைப் பற்றி ஒரு மேதை என்ன சொல்கிறார் என்று பாருங்கள்.

'All are not statesmen. Statesmen are those who give something to the country and politicians are those who expect something from the country.' Most of the Congressmen come under the latter category including the leaders.

"நமது அரசியல்வாதிகள் எதையும் எதிர்பார்க்காமல் நாட்டின் நலனை எண்ணியே உழைப்பதாக நடித்து உலகை ஏமாற்றுகிறார்கள். தாங்கள் கடைபிடிப்பது அஹிம்ஸா தர்மமாகும் என்று சொல்லும் இந்தப்

24th February 1954] [Sri U. Muthuramalinga Thevar]

புண்யவான்கள் நாட்டில் நியாயத்திற்காக, நேர்மையாக, நீதிக்காக, அமைதியான முறையில் கிளர்ச்சி செய்பவர்களை போலீஸ் உதவியைக் கொண்டு பலாத்காரமாக சுட்டுத்தள்ளியும், தடியடிப்பிரயோகம் செய்தும் அடக்கிவருவதை நாம் பார்க்காமலா இருக்கிறோம். சத்தியமே பேசுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, மக்கள் எல்லோரையும் உண்மையே பேசவேண்டுமென்றும் வெட்கமின்றி வேண்டுகோள் விடுத்துவரும் இந்த அரிச்சந்திரர்கள் சட்டசபையிலே ஒவ்வொருநாளும் தனது பேச்சு சாதுர்யத்தால், வாதாடும் திறமையால், அறிவுக் கூர்மையால் பிறர் அறியாதவாறு சொல்லிக்கொண்டுவரும் அளவற்ற பொய்யை நாம் அறியாமலா இருக்கிறோம். அறிவில் சிறந்த பல அங்கத்தினர்கள் உட்கார்ந்துகொண்டிருக்கும் இந்தச் சபை சாதாரணமான இடமில்லை. This is not a debating society, Sir. இங்கே வந்திருக்கும் ஒவ்வொரு அங்கத்தினரும் தனது தொகுதி மக்கள் படும் அல்லல்களை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு வேண்டிய நிவாரணத்தை உடனடியாக அளிப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வதற்காக வந்திருக்கிறார்கள். இந்த இடத்திலே தன் புத்தி சாதுர்யத்தைக் காட்டிப் பேசி பிறரை சிரிக்க வைப்பது தானா முறை? அதற்காகவா நாம் இங்கே கூடியிருக்கிறோம். அப்படி யிருந்தால் நாம் இவ்விடத்தில் கூடுவதற்குப் பதிலாக வேறு இடத்தில் கூடியிருக்கலாமே. பல தொகுதி அங்கத்தினர்கள் இந்தச் சபையில் இருக்கிறார்கள். அவர்கள் மக்கள் படும் அல்லல்களை எடுத்துச் சொல்லும்போது அவ்வாறு சொல்லுகிறவர் அங்கத்தினர் யார், அவர் எந்தக் கட்சியை சேர்ந்தவர் என்றெல்லாம் பார்த்துக் கொண்டு, அவர் எதிர்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தால் அவர் சொல்வது அத்தனையும் பொய்யென்று யோசனையில்லாமலே ய, விசாரணையில்லாமலேயே பதிலளித்துவிடுவதும், காங்கிரஸ் கட்சி அங்கத்தினரே சொல்லியிருந்தால் அவர் கட்சிக்கட்டுப்பாட்டை மீறி சர்க்காரை குறைகூறினார் என்பதற்காக அவர் மேல் ஒழுங்கு நடவடிக்கையை எடுப்பதையும் தவிர இவர்களில் யார் சொல்லும் குறைகளையும் நீக்குவதற்கு முன்வருவதாக எனக்குத் தெரியவில்லை. சொல்லுக்குச் சொல் யுக்திவாதத்தையும், ஞாபகம் இல்லை, ஞாபகம் இருக்கிறது என்றெல்லாம் சொல்லி தான் செய்யும் தப்புக்களையெல்லாம் தனது ஞாபகம், ஞாபகமறதி இவைகளின் மேல் போட்டுவிடு அலங்கோலமான முறையில் ஆட்சி நடத்திக் கொண்டு போனால் கடைசியில் இது எந்த இடத்தில் கொண்டுபோய்விடுமென்று இன்று என்னால் சொல்ல முடியாது. வரி வசூல் விவசாயிகளிடம் கர்ண கடூரமாக நடத்தப்படுகிறது. தள்ளிக்கொடுத்த இடங்களெல்லாம் மீண்டும் ஜப்தி முதலிய கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறது. பர்டோலியில் அன்று ஆங்கிலேயன் செய்த கொடுமையை மிஞ்சுகிறது காங்கிரஸ் அமுல்.

"கடன் ஒத்திவைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக்கொள்ளுகிறார்கள். கொண்டுவரட்டும். வரவேற்கிறோம். ஆனால் அதே சமயத்தில் விவசாயிகளுக்குக் கடன் வாங்குவதற்கும் கிராமங்களில் பாங்குகள் வசதி செய்து கொடுத்தால் தானே அந்தச் சட்டத்தினால் உண்மையிலேயே பயன் ஏற்படும்? அப்படிச்செய்யாவிட்டால் ஜெய் ஹிந்த், ஜெய் ஹிந்த் என்று சொல்லிக்கொண்டு, ஐ. என். ஏ. க்காரர்களுக்கு வேலை கொடுக்காமலும், அவர்களுக்கு எந்த விதமான உதவியையும் செய்யாமல் பட்டினியால் தவித்துச் சாகும்படி விடுகின்ற இந்த காருண்யமூர்த்தி விவசாயிகளுக்கு நன்மையைச் செய்கிறோம், நன்மையைச் செய்கிறோம் என்று உதட்டளவில் சொல்லிக்கொண்டு அவர்களை அடியோடு குழிதோண்டி புதைக்கும் காரியத்தில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தானே நாம் கொள்ள முடியும்? ஜெய் ஹிந்த் என்பது தான் அரசியலுக்கு சகாயம். அதே நேரத்தில் அதற்குக் காரண புருஷர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

"கடைசியாக கல்வித்திட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஆச்சாரியார் புதுக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது அதை பல பெற்றோர்கள் எதிர்த்தார்கள். குழந்தைகளுக்குப் பாடம் போதித்துக்கொண்டிருக்கும் பல ஆசிரியர்கள் எதிர்த்தார்கள். சட்டசபை அங்கத்தினர்கள் எதிர்த்தார்கள். அவர்கள், கட்சிக்காரர்களே எதிர்த்தார்கள், ஆனால் வெளியிட

[Sri U. Muthuramalinga Thevar] [24th February 1954

முடியாமல் கட்சிக்கட்டுப்பாடு அவர்கள் பிராணனை வாங்கிற்று. நாட்டிலுள்ள கல்வி நிபுணர்கள் எதிர்த்தார்கள். ஆனால் அவ்வளவு பேர் சொல்வதும் தப்பு. தாம் ஒருவர் சொல்வதுதான் சரியானது என்ற அகந்தையில், இறுமாப்பில் தாந்தோணித்தனமாக ஸ்ரீ ஆச்சாரியார் இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து புகுத்தினார்கள். அதனால் கொதிப்படைந்த பல கட்சிகள் தங்களது எதிர்ப்பைக் காட்டிக்கொள்ளும் முறையில், நியாயமான வகையில் சட்டத்திற்கு உட்பட்டே கிளர்ச்சிகள் நடத்தியும் கூட நமது ஆச்சாரியார் அவர்கள் மேல் பலாத்காரமாக போலீஸ் படையை ஏவி தடியால் அடிக்கச் செய்து, துப்பாக்கியால் சுடச்செய்து 'நீர் செய்தது தப்பு,' என்றவனை எல்லாம் இழுத்து சிறையில் போட்டுவிட்டு 'எனது திட்டத்தை எல்லோரும் ஆதரிக்கிறார்கள். பருளேகர் கமிட்டியும் இதை அங்கீகரித்துவிட்டது. மத்திய கல்வி ஆலோசனை போர்டும் பருளேகர் கமிட்டியின் ரிப்போர்ட்டை ஒப்புக்கொண்டுவிட்டது' என்று பெருமைப் படுகிறார்கள் என்றால் நெருப்புக்கோழி கண்ணை மூடிக்கொண்டு உலக்மே அஸ்தமித்து விட்டது என்று எண்ணிக்கொள்ளும் தன்மையைப் போலத்தான் இது இருக்கிறது என்று சொல்லத்தோன்றுகிறது. இந்தப் புதுக்கல்வித் திட்டத்தை கனம் ஆச்சாரியார் கொண்டுவந்து புகுத்திய போது நாட்டில் எற்பட்ட வாதப் பிரதிவாதங்கள் எதிலும் நான் சம்பந் தப்படாமல் நடுநிலைமையிலே இருந்துகொண்டு என்ன நடக்கிறது என்று பார்த்து வந்தேன். இந்திய தேசத்திலிருந்து பாகிஸ்தான் பிரிந்த போது நாட்டில் முஸ்லிம்களால் செய்யப்பட்டது அவ்வளவும் சரியானது. அவர்களை சகோதரர்களாகவே பாவித்து நன்மை செய்யவேண்டுமென்று சொல்லிய காந்தியார், அதனால் நாட்டில் எற்பட்ட அநீதிகளுக்கு எல்லாம் எப்படிக் காரணமாக இருந்தாரோ, அதனால் எப்படி உயர்ந்து இருந்த தனது ஸ்தானத்திலிருந்து வழுக்கி சரசரவென கீழே விழுந்தாரோ அதைப்போலவும், காஷ்மீரைப் பற்றிய விஷயத்தில் எப்படி இந்தியப் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு ஷேக் அப்துல்லாவை நம்பி முழுக்க முழுக்க மோசம் போய் நாசம் அடைந்தாரோ அதைப் போலவும், ஸ்ரீ ராஜாஜி அவர்கள் தனது சொந்த மூளையினால் சிருஷ்டி செய்யப்பட்ட திட்டம் என்று சொல்லிக் கொண்டு ஒரு புதுக் கல்வித்திட்டத்தை கொண்டு வந்து என்றும் அழியா மாசைத் தேடிக்கொண்டுவிட்டார் என்று மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன். அந்தத் திட்டம் உண்மையிலேயே நல்ல திட்டமாக இருக்கலாம். இருந்தாலும் அதைக் கொண்டுவரவேண்டிய முறை என்னவென்று ஜனநாயகத்தில் ரொம்பவும் பண்பட்டவரைப்போலப் பேசும் கனம் ஆச்சாரியாருக்குத் தெரியாதா? தெரிந்தும் ஏன் இந்தச் சபையோரைக் கலந்து கொள்ளாமல், கல்வி நிபுணர்களைக் கலந்துகொள் ளாமல், தங்கள் குழந்தைகளின் படிப்பில் முதன்மையான அக்கரையைப் பெற்று இருக்கின்ற இந்த நாட்டுப் பெற்றோர்களைக் கலந்து கொள்ளாமல் கொண்டுவந்தார்கள் என்று நான் கேட்கிறேன். இங்கேதான் கனம் ஆச்சாரியாரின் உண்மை ஸ்வரூபம் வெளி வருகிறது. 'என்னிஷ்டப்படி சர்வாதிகாரம் செய்வேன். யதேச்சாதிகாரம் செய்வேன். அதை யாரும் தடுக்க முடியாது' என்று சொல்லும் வெறித் தன்மை வெளிப்படுகிறது. குழந்தைகளுக்கு நன்மை செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு குழந்தைகளுக்கும் சொல்லமுடியாத தீமையைத்தான் செய்திருக்கிறார் ஆச்சாரியார். இந்தத் திட்டம் நன்மையைப் பயக்கும் ஒரு திட்டமாகவே இருந்தாலும்கூட, யாரையும் கேட்காமல் ஏன் கொண்டுவந்தீர்கள் என்று கேட்டால் சங்கரரும், புத்தரும் யாரைக் கேட்டுக்கொண்டு இந்த உலகத்திற்கு நன்மையைச் செய்தார்கள் என்று சொல்லுகிறார் கனம் முதல் அமைச்சர். சங்கரரும், புத்தரும் இவரைப் போன்று அரசியல் வாதிகளா? அல்லது ஜனநாயக வாதிகளா என்று நான் கேட்கிறேன். அது போகட்டும். சங்கரரையும், புத்தரையும் போல நாட்டுக்கு நன்மையை நான் செய்கிறேன் என்று தன்னைப்பற்றி தானே தம்பட்டம் போட்டுக் கொள்ளுகிறாரே. இது சரியா. அப்படியே நடந்துகொண்டாலும் இவர் சங்கரரைப் போல, புத்தரைப் போல நடந்துகொள்ளுகிறார் என்று சொல்லி நாமல்லவா புகழவேண்டும். சங்கரரையும், புத்தரையும் போன்ற சிறந்த தத்துவ ஞானிகளை, மதாசாரியார்களை தன்னுடன் சேர்த்து இவர் ஒப்பிட்டுக் கொள்வதன் மூலம் இவர் ஹிந்து தர்மத்தையே, ஹிந்து மதத்தையே அவமானப்படுத்துகிறார், பழிக்கிறார் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

24th February 1954] [Sri U. Muthuramalinga Thevar]

"இந்தக் கல்வித் திட்டத்தால் மாணவர்களுக்குக் கெடுதியே ஏற்படும். ஏற்பட்டிருக்கிறது என்று பெற்றோர்கள் சொல்லுகிறார்கள். ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள், அறிவாளிகள் சொல்லுகிறார்கள்—இந்தச் சர்க்காரைக் கவிழ்க்க வேண்டுமென்று எண்ணம்கொண்ட சில சுயநலக் கட்சிக்காரர்களும் சொல்லுகிறார்கள். அதை நான் இல்லையெனக்கவில்லை—ஆனால் பெரும்பான்மையோரால் உண்மையாகவே ஒருமுகமாக எதிர்க்கப்படுகின்ற இந்தக் கல்வித் திட்டத்தை இவ்வாண்டு நகரங்களுக்கும் விஸ்தரிக்கப் போகிறோம் என்று சொல்லும்போது - எனக்கு என்ன சொல்வது என்று தான் புரியவில்லை. குதிரை கீழே தள்ளியதோடு அல்லாமல் குழியும் தோண்டிற்றும் என்ற பழமொழிக்கேற்ப இவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள் என்னுதான் சொல்லத் தோன்றுகிறது. 'அன்றைக்கு நான் பல நல்ல காரியங்களைச் செய்தேன். அதை அப்போதும் பலர் எதித்தார்கள். இப்போதும் இந்தக் காரியத்தை எதிர்க்கிறார்கள். இதன் அருமை பின்பு தான் தெரியும்' என்கிறார் ஆச்சாரியார். முன்பு ஆலயப் பிரவேச சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள். எதிர்த்தவர்கள் நாங்களா ? அல்லது இன்றைக்கு நீங்கள் சொல்வதற்கு எல்லாம் தாளம் போடும் சநாதிநிகளா என்று நான் அவரைக் கேட்கின்றேன். அன்றைக்கு மக்களின் நன்மையை உத்தேசித்து நீங்கள் கொண்டுவந்ததை எல்லாம் ஆதரித்த நாங்கள் இன்றைக்கு உங்களை எதிர்க்கிறோம் என்றால் மக்களால் விரும்பப்படாத காரியங்களை நீங்கள் செய்கிறீர்கள். நீங்கள் செய்யும் தவறுகளுக்கு நாங்கள் உப்படமாட்டோம் என்பதை உங்களுக்கு உணர்த்தத்தான் எதிர்க்கிறோம் என்பதை உங்களால் அறிந்துகொள்ள முடியவில்லையா?

"தனக்குள்ள பதவி, அதிகாரம், போலீஸ், ராணுவம் ஆகியவற்றை யாரும் ரொம்ப நாள் நம்பி நாட்டை ஆண்டு விடமுடியாது.

'அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'

என்றபடி மக்கள் படுகின்ற அல்லல், அவர்கள் விடும் கண்ணீர் நிச்சயம் இந்தச் சர்க்காரை அழித்துவிடும் என்று அறிவுறுத்த விரும்புகிறேன். ஆகவே இனியாகிலும் உடனடியாக இந்தக் கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு மற்ற காரியங்களையும், நேர்மையான முறையில், சத்தியத்திற்கு கட்டுப்பட்டு ராஜதந்திரம் என்ற முறையில் பித்தலாட்டத்தனம் எதுவும் செய்யாமல் நடந்துகொள்வார்களா ? நடந்துகொள்ளும்படியாக இந்தச் ராஜ்யத் தலைவராவது இவர்களுக்குப் புத்தி சொல்வார்களா ? இரண்டும் நடக்கக்கூடிய காரியமாக எனக்குத் தோன்றவில்லை. ஆகவே இவர்கள் எல்லோருக்குமே ஆண்டவன்தான் புத்தி கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—"I now reduce the time-limit from 15 minutes to 10 minutes."

* SRI S. DEIVASIGAMANY :—"Mr. Deputy Speaker, I wonder whether a formal resolution of thanks to His Excellency the Governor of Madras for his Address to the Joint Sessions of the Legislature is absolutely necessary in a democratic set-up like ours. I consider that the motion of thanks is tantamount to thanking the Executive. His Excellency the Governor was not a free agent when he delivered that speech. Because, his speech had got to be placed before the Cabinet and it had to get the seal of approval of the Cabinet. Such being the case, I would submit that it is not necessary to adopt this resolution of thanks to him. The framers of the rules and regulations to be followed by this House should go into this aspect of the question and amend the rules suitably.

[Sri S. Deivasigamany] [24th February 1954

"Sir, I was expecting His Excellency to refer to a very important question which has been agitating the minds of the public of this State. There has been a widespread rumour in the State of Madras that the Hon. Chief Minister will be retiring after this budget session. That has been a public secret which has been agitating the mind of everybody. As the Head of the State, I expected the Governor to make a reference to this subject in his Address. But, unfortunately, nothing has been said by him on this matter. Therefore, I humbly request the Hon. Chief Minister, who is present here now, to let us know whether there is any foundation frr the rumour that is afloat in this State. By answering this question, he will be doing a great public service in setting the people's minds at rest.

"Sir, I should say that this Government have done very many good things in the interests of the public of the State. But, they have also done certain things which have not been approved by the public and against which they have lodged their emphatic protest. Certain proposals of this Government have not been well received by the public. For instance, in the matter of the introduction of the modified scheme of elementary education, there has been widespread protest everywhere against it. There have been protests not only from the teachers but also from the public and other sources. But, the Government have not paid any heed to these protests. I understand that the Government are proceeding with the scheme, that they have introduced in the panchayat areas and villages, by extending it to municipal towns and also to the City of Madras. From the little experience that I have gained through my visits to some of the schools where this scheme has been introduced, I find that this scheme has not been working properly and that it will not work properly. Some individuals may think that it will be beneficial to the pupils and also to the coming generation. But it has got to be tested by experience. What is being done now? It is the unanimous opinion of all concerned that this scheme is a failure. I request the Government to reconsider this question and withdraw the scheme.

"I am glad that the Government have come with a proposal to open a Medical College at Madurai. It is a very good proposal. It may produce more number of medical graduates, but with what result? They will be only adding more number of graduates to the already existing vast number of unemployed graduates, and the unemployment problem will be more intensified. The Government must do something to give work for all these graduates and this is very important. Mr. Deputy Speaker, there are a number of medical graduates who are now without employment. At one time, the Government had a proposal to introduce a shortened course in medicine. But I understand that that proposal has now been abandoned. Whatever it is, I request the Government to see that all these persons are absorbed in suitable jobs, as otherwise, we will have to face a more intensified unemployment problem.

24th February 1954] [Sri S. Deivasigamany]

" There is one other matter that has been referred to in the Governor's Speech, namely, the opening of elementary schools in every village which has got a population of over thousand persons. Sir, the House may know that in almost all firkas there is no village which has got a population of a thousand persons, or more. In my own firka, the Perunthur firka, there are about 200 villages. In each village, the population would be only about 400 or 500. The villages are dispersed here and there, so much so a school will not be available for these villages in the near future. What are the Government going to do in such cases? In giving education to the poor boys and girls, we cannot expect them to go from one village to another, for, the distance between two villages is nearly 2 or 3 miles or even more. It should be the aim of the Government to make education reach the homes of the children. That must be the policy of the Government and education should be given free at all stages, from the elementary stage up to the college stage. That has been the ideal of all countries in the world. Therefore, I submit to Government that they must come out with a scheme or a proposal to interconnect these villages and then start or establish a school which will be common to the villages so grouped. Government should not say that they would open schools only in villages which have got a population of thousand persons or more. 12 noon.

" Then, with regard to the villages themselves, the set-up of the villages is such that it is impossible to give them adequate amenities. People in villages are living even today in conditions which probably obtained about 2,000 years ago. They are living in small hovels; they are ill-clad, half-starved and most of them are landless labourers, working for absentee landlords. Such are the people who are living in villages. How are the Government going to improve their living conditions? I can only suggest that many of the villages should be scrapped off and new colonies should be established; the villagers should be housed there with proper amenities—modern amenities such as good houses, schools, hospitals and even attractions like cinemas should be provided. Then only we will be attaining the conditions somewhat similar to those prevailing in other parts of the world. That is the way the Government should approach the problem for solving it. I would humbly submit that the Minister in charge of Co-operation and Building Societies should go into these questions. He should also start multi-purpose societies and co-operative farms which will be beneficial to villages.

" There are certain villages in my own firka which are owned by rich landlords—there is a Mutt called the Ahobilam Mutt which owns an entire village called Arimbakkam which is a ryotwari village. The landlords through their agents very often try to eject the peasants. The condition of these ryots, the House will be surprised to know, is rather very very bad. In such cases, the Government should study their conditions, find out how best they can help them and do what is necessary. I suggest that in cases

where the land is held on ryotwari basis, the Government should acquire the lands and redistribute the lands to the actual tillers of the soil.''

DEPUTY SPEAKER :—'' The hon. Member's time is over.''

* SRI S. DEIVASIGAMANY :—'' I am sorry I am exceeding my time. Thank you, Sir.''

* SRI V. BALAKRISHNAN :—'' கனம் உதவி சபாநாயகர் அவர்களே: கவர்னர் அவர்களது பிரசங்கம் சம்பிரதாய முறைப்படி இருக்கிறது. அவர்கள் செய்த பிரசங்கத்தை நான் குறைகூற முன் வரவில்லை. இதில் இதுவரை செய்த நன்மைகளை இறுமாப்புடன் சொல்லாமலும், செய்யப் போவதை கண்யமாகவும் சொல்லி இருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய நண்பர் ஸ்ரீ தெய்வசிகாமணி சர்க்கார் செய்த சில நன்மைகளைப்பற்றியும் பேசினார். இவைகள் பாராட்டுக்குரியன. நாம் சர்க்காரை ஆதரித்துக் கொண்டேபோனால்தான் அவர்களும் சீக்கிரம் ஜனங்களுக்கு நன்மைகளைச் செய்ய மகிழ்ச்சியோடு முன்வருவார்கள். வண்டி பூட்டிய மாடு பொதியைச் சுமந்துக்கொண்டு போகிறது. வண்டியை நன்றாக வேலைப்படுத்தி, மாட்டுக்கு நல்ல உணவு அளித்து, அன்பாக நடத்தி ஆதரவு காட்டினால் தான் அதுவும் தளர்ச்சியில்லாமல் மகிழ்ச்சியோடு பொதியைச் சுமந்துக் கொண்டுபோகும். அவ்வாறின்றி மாட்டை எந்நேரமும் அடித்துக்கொண்டு சரியானபடி அதற்கு வேண்டிய தீனியையும் கொடுக்காமல் வேலையை மாத்திரம் வாங்கி அலட்சியம் செய்தால் மாட்டுக்குச் சோர்வு - கண்டு வண்டியை நன்றாய் இழுக்காது. அதனால் ஒருவித நன்மையும் ஏற்படாது. இந்த நிலைமையில்தான் சர்க்காரும் இருக்கிறது. சர்க்கார் நம்மை நல்ல வழியில் செலுத்தவேண்டுமானால், நமக்கு நன்மைகள் பல செய்ய வேண்டுமானால், நம் மக்களுக்கு சேவை செய்யவேண்டுமானால், அதனால் நம் நாட்டிற்கு பெருமை ஏற்படவேண்டுமானால், அவர்கள் நல்ல சட்ட திட்டத்தைச் செய்ய முன்வரும்போது அதற்கு நாமும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

'' கவர்னர் அவர்களது பிரசங்கத்தில் முக்கியமாக நீர்ப்பாசனத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்கள் அதிகப்படியாக ஏற்படுத் தப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இவைகள் இரண்டும் மக்களுக்கு மகிழ்ச்சியை தரக்கூடியவை தான்.

'' ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் சில பகுதிகள் வானம்பார்த்த பூமியாக இருக்கின்றன. மழை பெய்தால் இங்கு ஏதாவது விளைச்சல் காணலாம். மழை பெய்தால்தான் விமோசனம். இல்லையேல் ஒரு வித விளைச்சலையும் எதிர்பார்க்கமுடியாது. எதிரிகளுக்கு ஏதாவது கெடுதல் செய்யவேண்டுமென்றால் இந்த இடங்களில் நிலங்களை வாங்கி, பட்டா கொடுத்துவிட்டால் தங்கள் மானம் மரியாதைகளையிழந்து இந்த உலகை விட்டு சீக்கிரம் வெளியேறிவிடுவார்கள். வானம்பார்த்த பிரதேசத்தில் விவசாயிகளின் நிலை இது. நீர்ப்பாசன வசதி மிகமிகக் குறைவான இந்த ஜில்லாவில் எந்தவிதமான சட்டம் போட்டும், திட்டம் தீட்டியும் ஒருவிதமான நன்மையும் ஏற்படவில்லை. பல திட்டங்களைத் தீட்டவேண்டுமானால் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும். சர்க்காரில் சில திட்டங்கள் தீட்டுவதற்காக, சில செலவினங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற பணம் 100-க்கு 100 ஜனங்களுக்காக பயன்படுவதாகத் தெரியவில்லை. பொது மக்கள் வாழ வழிசெய்வதற்கு சட்டத்தை திருத்த அரசாங்கம் முன்வரவில்லை. பழுதுபார்க்கும் வேலைகளையும் மராமத்து வேலைகளையும் கண்டிராக்டர்களிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். தனிப்பட்ட ஒருவர் லாபம் சம்பாதிப்பதற்குத்தான் அரசாங்கம் செய்யும் காரியம் ஒவ்வொன்றும் ஏதுவாயிருக்கிறது. இவர்கள் லாபம் சம்பாதிப்பதற்காக மிகக் குறைந்த விலையில் மட்டமான பொருள்களை வாங்கி கட்டடத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதுபோன்ற வேலைகளை ஆயக்கட்டுக்காரர்களுக்கு தான் கொடுக்கவேண்டுமென்று இருக்கும்போது, இந்த வேலைகளை தாசில்தார் தனிப்பட்ட கண்டிராக்டர்களிடம் ஒப்படைத்து விடுகிறார்கள்.

24th February 1954] [Sri V. Balakrishnan]

அதனால்தான் சர்க்காரால் ஒதுக்கப்படும் பணம் நூற்றுக்கு நூறு ஜனங்களுக்கு உபயோகப்படுவதில்லையென்று சொன்னேன். உத்தியோகஸ்தர்கள் கைலஞ்சமாகவும், இனாமாகவும், கண்டிராக்டர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு இவர்களை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள். ஆதலால் இவைகளை நன்றாகப் பரிசீலனைச் செய்து செலவிடும் பணம் சரியாகப் பயன்படும்படி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"பள்ளிக்கூடங்களை அதிகமாக ஆக்கப் போகிறார்கள் என்ற செய்தி மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. கிராமங்களில் பள்ளிக் கூட உபாத்தியாயர்கள் 10, 15 நாட்கள் லீவு எடுத்துக் கொண்டு போய் விட்டால் ஜில்லா போர்டு அதிகாரிகள் இந்தப் பள்ளிக்கூடத்தை மூடி விடுகிறார்கள். அவர்களுக்குப் பதிலாக வேறு ஆட்களை போடுவதும் கிடையாது. லீவு எடுக்கின்ற உபாத்தியாயர்களும் தங்களுக்கு லீவு நாட்களை அதிகப்படுத்தவேண்டுமானால் வீட்டிலிருந்தே மனுச் செய்து விடுகிறார்கள். இவ்வாறாக பள்ளிக் கூடங்கள் சில வேளைகளில், 3, 4 மாதங்கள் மூடப்படுகின்றன. திரும்பவும் பள்ளிக்களைத் துவக்க வேண்டுமானால் ஜில்லா போர்டு அதிகாரிகட்கு மனுச் செய்து கொண்டு, உத்தரவை எதிர்ப்பார்க்க வேண்டியதாயிருக்கிறது. ஆதலால் பள்ளி ஆசிரியர் லீவில் போவதற்கு முன்பே அந்த இடத்தில் ஒரு உபாத்தியாயரை நியமித்துவிட்டு பிறகு அவரை லீவில் போகச் செய்யவேண்டும். அப்புறம் அவர் லீவில் இருந்து வந்த பிறகுதான் புதிய உபாத்தியாயரை அனுப்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் பள்ளிகள் மூடப்படாமல் பள்ளி மாணவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாமல் இருக்கும். ஆதலால் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தப்படியாக விவசாயிகளுக்கு உதவி செய்வதில் புதிய உணர்ச்சி அதிகம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறேன். ஆனால் இப் புதிய உணர்ச்சி மந்திரிகளிடத்திலும், உத்யோகஸ்தர்களிடத்திலும் தான் காணப்படுகிறதே தவிர காரியத்தில் விவசாயிகளிடத்தில் காணப்படுவதாகத் தெரியவில்லை. ஏனென்றால் உத்யோகஸ்தர்களும், மந்திரிகளும் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டு இருக்கிறார்கள். நல்ல திட்டங்களைத் தெரிவிக்கிறார்கள். அதற்காக உத்தியோகஸ்தர்கள் எல்லாம் ஓடித்திரிகிறார்கள். ஆனால் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. ஏன்? அவைகளெல்லாம் பேச்சளவில் தான் இருக்கிறதே தவிர விவசாயிகளுக்குப் பலன் தரக் கூடியதாகவே இல்லை. அவர்களுடைய புத்திமதிகளைக் கேட்டு விவசாயிகள் பலன் அடைவது இல்லை. விவசாயிகள் பயன் பெறுவதற்கு வேண்டிய அமைப்பு சரியாக இல்லை. அவர்கள் விவசாயக் கருவிகள் வேண்டுமென்று கேட்டால் அவைகள் சுலபத்தில் கிடைப்பது இல்லை. அவைகளை வாங்குவதற்கு 20 அல்லது 25 மைலுக்கு அப்பால் போக வேண்டியதாக இருக்கிறது. அவ்விதம் வந்தும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் காத்திருந்து தான் தங்களுக்கு வேண்டிய உரத்தைப் பெற வேண்டியதாக இருக்கிறது. உரம் தருவது கொஞ்சமாக இருந்தாலும், உரத்தின் விலை கொஞ்சமாக இருந்தாலும் கூட இரண்டு மூன்று நாட்கள் காத்திருந்து படிச் செலவு செய்து இன்னும் பல சிரமங்களை அடைந்து உரம் பெற வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமையில் அவர்கள் வீடுகளுக்குப் போவதற்குள் ஏன் இந்த வேதனையான விவசாய முறையைப் பின் பற்ற வேண்டுமென்று மனச் சோர்வு அடைகிறார்கள். சென்ற கூட்டத்தில் கூட சர்க்கார் டிப் போக்களில் அமோனியா சல்பேட் உரம் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது என்றும், சொசைட்டிகளில் அதிகப்படியான விலைக்கு விற்கப்படுகிறது என்றும், அது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா என்றும் கேட்டதற்கு அப்படி இருக்காது என்று மந்திரி பதில் சொன்னார். இப்பொழுது அதைப் பற்றி எனக்கு வந்திருக்கும் லெட்டரை வாசிக்கிறேன். அதன் காப்பியும் மந்திரிக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அதில் எழுதப்பட்டிருக்கிறது. அக்ரிகல்சரல் டிப்போவில் ஒரு மூட்டை உரம் ரூ. 37-10-0என்றும், பி.சி.சி. டிப்போவில் ஒரு மூட்டையின் விலை ரூ. 40-9-6 என்றும் விற்கப்படுகிறது. அதன் வித்தியாசம் ரூ. 3 ஆக இருக்கிறது. இந்த வித்தியாசம் ஏன்? கிட்டத் தட்ட 100 கெஜத்தின் இடையில் இருக்கும் இந்த இரண்டு டிப் போக்களிலும் ஏன் இந்த வித்தியாசம் இருக்கிறது என்று அவர்கள் எழுதி இருக்கிறார்கள். அதைப் பற்றி கேட்டபோது மந்திரி அவர்கள்

12-12 p.m.

[Sri V. Balakrishnan] [24th February 1954

அதைப் பற்றி எனக்குத் தெரியாது ' என்று சொல்லுகிறார். அப்படி இருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆகவே விவசாயிகளுக்கு உரம் கொடுக்கும்போது ஒரே விலையிலும், ஒரே இடத்திலும் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் இரண்டு இடங்களில் பிரித்து, ஒரு இடத்தில் ஒரு விலையும், மற்றொரு இடத்தில் மற்றொரு விலையும் வைத்துக்கொடுத்தால் விவசாயிகளுக்கு சௌகர்யம் இல்லை. கூடுமான வரைக்கும் ஒரே விலையில் கொடுப்பது தான் நல்லது. அப்பொழுது தான் விவசாயிகள் நன்மை அடைவார்கள்.

"மேலும் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டு மென்றால் இன்னும் அதிகப் படியான டிமான்ஸ்டிரேட்டர்களையும், விவசாயி ஆபீசர்களையும் நியமித்து டிப்போக்களை கிட்டத் தட்ட 5, அல்லது 6, அல்லது 10 மைலுக்குள் இருக்கும்படி செய்யவேண்டும். விவசாயிகள் வந்தவுடன் அவர்கள் தங்களுடைய காரியங்களை முடித்துக்கொண்டு உடனே வீட்டிற்குப் போவதற்கு வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். பிறகு அவர்கள் தங்களுடைய வேலைகளில் ஈடுபடும்படி செய்யவேண்டும். அது இல்லாமல் பெரிய திட்டங்களைப் போட்டு விட்டு மந்திரிகள் சுற்றுப் பிரயாணங்கள் செய்து உணர்ச்சி உண்டாக்கும்படியான பிரசங்கங்களைச் செய்து கொண்டிருந்தால் பிரயோசனமில்லை. அதிகாரிகள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தாலும் பலன் ஏற்படப் போவதில்லை. மக்களுடைய பணம் தான் அதிகமாக செலவழிக்கப்படும். இதைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

DEPUTY SPEAKER :—"One minute more for the hon. Member."

SRI V. BALAKRISHNAN :—"ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். ஐந்து வருஷ திட்டம் அதிக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய பணத்தை உடனடியாகச் செலவு செய்ய வேண்டும். ஆனால் ஜனங்கள் தங்களுடைய பங்குப் பணத்தைக் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆனால் சரீரப் பிரயாசை செய்யத்தயாராக இருக்கிறார்கள். ஆனால் பணம் செலவு செய்ய அவர்களுடைய நிலைமை சரியாக இல்லாததால் சர்க்கார் செலவு செய்ய வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை சர்க்கார் தவறவிடாமல் மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டிய பங்கு பணத்தை வாங்கி அதைக் கொண்டு நமது மக்களின் பங்கை முன் பணமாகப்போட்டு அதை மக்களிடமிருந்து இரண்டு, மூன்று தவணைகளில் கிஸ்தி வசூல் செய்வதைப் போல் வசூல் செய்து கொள்ளலாம். அவ்விதம் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற சர்க்கார் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

12-17 p.m. * **SRI S. N. SOMAYAJULU :—**"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தை பாராட்டும் முறையில் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பிரசங்கம் உண்மையில் இங்கு இருக்கக்கூடிய நிலவரத்தை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது. அதில் அழகான வார்த்தைகள் காணப்படாவிட்டாலும் சர்க்கார் என்னி செய்யப் போகிறார்கள் என்பதை சுருக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஆந்திர தேசம் பிரிந்த பிற்பாடு நாம் இன்றைய தினம் கண்யமாகவும், சமாதானமாகவும், நியாயமாகவும் வாழ்ந்து வருகிறோம். அது நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய விஷயம். இதையேதான் கவர்னர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார். உண்மையில் கலவரம் நடந்ததை வைத்துக்கொண்டு அதனால் தான் பிரிவினை ஏற்பட்டது என்று பேசுபவர்கள் நல்ல சூழ்நிலையில் பேசுவதாகத் தெரியவில்லை. ஒரு தனி தேசம் வேண்டும். அதுவும் ஒரு பாஷாவாரியான மாகாணம் வேண்டும் என்று சொல்லி வருவது ஒருவருடைய உயர்ந்த கருத்துக்களாக இருக்கலாம். தீர்க்கமான திட்டமாக இருக்கலாம். ஆனால் உண்ணா விரதத்தை வைத்துக்கொண்டு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தி விடலாம் என்று நினைத்தால் அது ஒரு தப்பான காரியம் என்பதை உபவாச கர்த்தாவாகிய மகாத்மா காந்தி தெளிவாகச் சொல்லி இருக்கிறார். ஆந்திர ராஜ்யம் வேண்டும் என்று உபவாசம் இருந்தவருடைய உபவாசத்தை சிலர் நிறுத்த முயற்சித்தார்கள். அது பலிக்கவில்லை. அவருடைய உண்ணா விரதத்தினால் ஏற்பட்ட விபரீதத்தினால் கலவரம் உண்டாயிற்று. அந்த கலவரத்தினால் தான் மாகாணம் பிரிந்தது என்று

24th February 1954] [Sri S. N. Somayajulu]

சொன்னால் அவர் ஒரு அதிசய மனிதராகத் தான் இருக்க வேண்டும். அவர் கற்பனை உலகத்தில் சஞ்சரிக்கக்கூடியவராகத் தான் இருக்க வேண்டும். ராஜ்ய நிர்வாகத்தை உண்ணா விரதத்தினால் கைப்பற்றலாம் என்று நினைத்தால் உலகத்தில் அரசியலை நடத்த முடியாது. உண்ணா விரதம் இருந்தும், கலவரம் நடந்தும் அதற்குப் பின்னால் இத்தகைய ஆஸ்தியை அடைந்து, இவ்வளவிற்கும் பின்னால் சுமுகமாக சூழ்நிலை ஏற்பட்டது என்று சொன்னால் அதன் பெருமை இந்த ராஜ்யத்தின் முதல் மந்திரி ராஜாஜிக்கும், கவர்னருக்கும் தான் சாரும். அதற்கு அவர்களை பாராட்ட வேண்டியது அவசியம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமீபத்தில் பாகிஸ்தான் பிரிந்த பிற்பாடு கூட விவகாரம் தீர்ந்தபாடில்லை. இன்னும் கோடிக்கணக்கான ரூபாய் அவர்களுக்கு வர வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நமக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வர வேண்டும் என்று நாம் கணக்கு எழுதி வைத்திருக்கிறோம். இதற்கு முன்னால் செவ்வழிக்கப்பட்ட பணம் என்ன வாயிற்று என்று தெரியவில்லை. நாட்டில் கலவரம் வந்தபோது அதை சமாளிக்க தக்க நடவடிக்கை எடுத்து இப்போது அது நின்று அதற்குப் பின் சாதாரண சகஜ நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போலவே இப்பொழுது சுமுக சகஜ நிலைமை ஏற்பட்ட பின் அதனைப் பாராட்டாமல் குற்றம் குறை கூறுவது நியாயத்திற்கும் தர்மத்திற்கும் உகந்ததாக இல்லை. இதை எல்லோரும் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த சுமுகமான சூழ் நிலையில் என்ன ஏற்பட்டிருக்கிறது? கிட்டத் தட்ட 2½ லட்சம் டன் அரிசி நமக்குக் கொடுப்பதாக ஆந்திரர்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்றும் அதுவும் இப்பொழுது வரக் கூடிய நிலையில் இருக்கிறது என்றும் கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைக் கண்டு நாம் அரசாங்கத்தை பாராட்டாமல் இருக்க முடியாது.

" தமிழர்கள் வாழக் கூடிய இடங்களை ஒன்று சேர்த்து அதை தமிழ் நாட்டுடன் சேர்க்க ஒரு எல்லைக் கமிஷனையும் சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்கு எல்லைக் கமிஷனை சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களை சர்க்கார் சேகரிக்க ஆரம்ப வேலை செய்து கொண்டு வருகிறது. இதை கவர்னர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சித்தூர் தமிழர்களையும் அவர்கள் வாழும் ஒவ்வொரு தமிழ் பிரதேசத்தையும் சேர்க்கப் போகிறார்கள். அங்கிருக்கக்கூடிய மைனாரிட்டிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப் போகிறார்கள். கவர்னர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் இதை குறிப்பிட்டிருக்கிறார். கம்யூனிஸ்ட் தோழர்கள் நாஞ்சில் திருவாங்கூர் எல்லையிலுள்ள தமிழர்களையும் சேர்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கு இப்பொழுது பாஷாவாரி மாகாணக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தமிழ் பிரதேசத்தையும் பரிசீலிக்க எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தமிழ் பிரதேசத்தையும் இந்த எல்லைக் கமிஷன் தமிழ் மாகாணத்துடன் சேர்க்காமல் தனியாக விட்டு விட மாட்டார்கள். சேர்க்கத்தான் சேர்ப்பார்கள் என்பதை அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலைமையில் அரசாங்கத்தை இது சம்பந்தமாக குற்றம் குறை சொல்வதில் அர்த்தமில்லை. இதைச் செய்யவில்லை; அதைச் செய்யவில்லை; என்று சொல்வதிலும் அர்த்தம் இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன்.

" இப்பொழுது நாட்டில் நல்ல மழை பெய்திருக்கிறது. எங்கும் ஓரளவு பசுமையைப் பார்க்கின்றோம். எங்கெல்லாம் மழை பெய்திருக்கிறதோ அங்கெல்லாம் ஓரளவு பசுமை காணப்படுகின்றது. ஆனால், சில இடங்களில் மழை பெய்யவில்லை. அந்த இடங்களில் பஞ்சம் இன்றைக்கும் நடமாடிக்கொண்டு இருக்கின்றது. அந்த இடங்களில் வசிக்கும் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும் என்று கேட்பதில் நியாயம் இருக்கிறது. 12-23 p.m.

" ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு—ஐந்து ஆண்டு பஞ்சத்திற்குப் பிறகு இயற்கையின் அருளினால் ஏராளமாக மழை பெய்து சுபீட்சத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும்போது, இயற்கையின் துரதிருஷ்டம் வேறுவிதத்

[Sri S. N. Somayajulu] [24th February 1954

தில் ஏற்பட்டுள்ளது. வெட்டுக்கிளி கிளம்பி பயிர்களை அழித்திருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தவரையில் சுமார் 25 ஆயிரம் ஏக்கரா வரை இதனால் பாதிக்கப்படுவதாக இருந்தது. விவசாய மந்திரி கனம் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களின் உடனடி முயற்சியினால் 15 அல்லது 16 ஆயிரம் ஏக்கரா வரையில் பயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. இருந்த போதிலும் கூட, ஸ்ரீமான் தேவர் அவர்கள் சொன்ன மாதிரி அரைவாசி, கால்வாசி அளவுதான் மகசூல் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. இதற்குச் சர்க்கார் என்ன செய்ய முடியும்? சுரங்கங்கள் தோண்டலாம், கிணறுகள் வெட்டலாம், குளத்தை மராமத்து செய்யலாம், ஆறுகளின் குறுக்கே அணைக்கட்டுகள் கட்டலாம். இவைகளையெல்லாம் சர்க்கார் செய்து கொண்டுதான் வருகிறார்கள். இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் பசுமை காணவேண்டுமென்பதற்கான பல பல காரியங்களை இந்தச் சர்க்கார் செய்துகொண்டுதான் வருகிறார்கள்.

"நிலங்கள் தரிசாகவே இடக்க வேண்டுமென்று யாரும் நினைக்கமாட்டார்கள். வறுமை நீடித்து இருக்கவேண்டுமென்று எவரும் நினைக்கவே மாட்டார்கள். பஞ்சம் இருக்கவேண்டும், பசி இருக்கவேண்டும் என்று யார் நினைப்பார்கள்? பஞ்சத்தையும், பசியையும் வைத்து அரசியல் விளையாடலாம் என்று இந்த நாட்டு நலனில் அக்கரையுள்ள யாரும் நினைக்கமாட்டார்கள். அரசியல் விளையாடலாம் என்று வேறு எவராவது நினைக்கலாமே தவிர்த்து, இந்த நாட்டு மக்களின் நலனில் கருத்துள்ள யாரும் நினைக்கமாட்டார்கள். பஞ்சத்தையும், பசியையும் போக்குவதற்கு எல்லோரும் முயற்சிப்பார்களே தவிர, அதற்கு யாரும் குறுக்கே நிற்க மாட்டார்கள். அதை வைத்துக்கொண்டு அரசியல் சூதாட்டம் ஆடவேண்டாம் என்பது தான் என்னைப் போன்றவர்களுடைய அபிப்பிராயம். பஞ்சம் இருக்கிறது; பசி இருக்கிறது; ஆகவே, இந்தச் சர்க்கார் பஞ்சத்தை நீக்க, பசியைப் போக்க, ஓரளவுக்கு அல்ல, பெருமளவுக்கு காரியங்களைச் செய்துகொண்டு வருகிறது. எங்கள் ஜில்லாவில் மணிமுத்தாறு திட்டத்தை விரைவில் முடிப்பதற்கான காரியங்கள் நடந்து கொண்டு வருகின்றன. அந்தத் திட்டம் முடிந்துவிட்டால் பஞ்சத்தை ஒருவிதமாக தீர்த்துக் கட்டிவிட முடியும். எவ்வளவு துரிதமாக முன்னேற்றம் அடைய முடியுமோ, அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கவர்னர் அவர்கள் பிரசங்கத்தில் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"அஹிம்சைக்கு விளக்கம் கூறப்பட்டது. வெள்ளைக்காரரோடு போராடும் போது நம் கையில் ஆயுதம் எதுவுமின்றி, சத்தியத்தையும் அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்டே காங்கிரஸ் போராடியது. அன்னிய அரசாட்சியோடு அஹிம்சா முறையில் போராடி சுதந்திரம் அடைந்தோம். 220 கோடி மக்களுக்குமேல் இருக்கும் இந்த உலகத்தில் அஹிம்சையால் ராஜ்யபாரத்தை நடத்தவேண்டுமென்று சொன்னால், அது ஸ்ரீமான் தேவர் அவர்களுடைய கற்பனை ராஜ்யமாக இருக்கவேண்டும். சத்தியத்தையும் அஹிம்சையையும் கொண்டு அன்னிய அரசாட்சியோடு போராடினாலுங்கூட, இந்தப் பெரிய தேசத்தை அஹிம்சா முறையிலேயே ராஜ்ய பாரம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்க முடியுமா? குறைந்த பக்ஷ பலாத்காரமும் இருக்கத்தானே வேண்டும்? ஸ்ரீமான் தேவர் அவர்களுக்கு இது தெரியாத ஒரு விஷயம் அல்லவே! தெரிந்தும் கூட சில சமயம் இப்படி பேசுவது அவர் வழக்கம்.

"எந்த ராஜ்யமானாலும் பலாத்காரத்தினால் நிர்வாகத்தை நடத்துவது தவறு. எந்த ராஜ்யத்திலும் அன்பு, சத்தியம் போன்றவைகளின் அடிப்படையில் காரியங்கள் நடக்கத்தான் வேண்டும். கள்ள மார்க்கெட்காரர்களும், மக்களைச் சுரண்டுபவர்களும் இதை உபயோகப்படுத்தும்பொழுது அவர்களை அடக்குவதற்கு ஏதாவது செய்துதானே தீரவேண்டும்? அதற்கும் அஹிம்சை முறையைக் கையாளுவதுதானே என்று சிலர் கேட்கிறார்கள். ஆம்; எங்களுடைய கொள்கை அஹிம்சா முறைதான். அதாவது அன்னிய ஆட்சியோடு போராடிய காலத்தில் எங்களுடைய கொள்கை அப்படித்தான் இருந்து வந்தது. ஆனால், இப்பொழுது ராஜ்யபாரத்தை வகித்துவரும்போது, வள்ளுவர் கூறிய முறைப்படி படை, குடி, கூழ்

24th February 1954] [Sri S. N. Somayajulu]

அமைச்சு, நட்பு, அரண் ஆகியவற்றைக் கொண்டுதான் நடத்துகிறோமே தவிர, இன்றைக்கு பலாத்காரத்தை மட்டும் வைத்துக்கொண்டு நடத்த வில்லை என்பதை அவர்கள் அறியவேண்டும். அறிமிகையின் அடிப்படை யில் மட்டும் சர்க்காருடைய காரியங்கள் நடத்தப்படவேண்டுமென்று அவர் கள் சொல்லுவதில் என்ன பொருள் இருக்கிறது ? ராஜ்யபாரத்தை நடத்து பவர்கள் யாராயிருந்தாலும் பலாத்காரத்தை ஓரளவு உபயோகித்துத்தான் ஆகவேண்டும். ஆனால், யார் மீது? அக்கிரமம் செய்பவர்கள் மீது ; கள்ளமார்க்கெட்காரர்கள் மீது ; இப்படிப்பட்டவர்கள் மீது பலாத்காரத்தை உபயோகிக்கத்தான் வேண்டும். இதை வைத்துக்கொண்டு வியாக்கியானம் செய்வதில் நியாயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையென்று ஸ்ரீமான் தேவர் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.

"பசி எங்கும் இருக்கிறது. அதை நீக்குவதற்கு மார்க்கம் என்ன என்பதைத்தான் கவனிக்கவேண்டும். குளங்கள் மராமத்து செய்யப்பட்டு, புதுப்பிக்கப்படுகின்றன. தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயம் தீவிரமான முறையில் செய்யப்பட்டு, அதன் மூலமாக 100க்கு 100 அதிகமான உணவு உற்பத்தியைச் செய்ய முடியுமா என்று சர்க்கார் யோசித்துக் கொண்டு, அதற்கு வேண்டிய காரியங்களையும் செய்து கொண்டு வருகின் றது. அதற்கு ஒரு ஆக்கமான திட்டத்தைக் கொடுத்தால், இந்தச் சர்க்கார் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ளும். அப்படி ஆக்கமான முறையில் இல்லாமல், சாக்காரைக் கண்டனம் செய்துகொண்டிருப்பதால் எந்தவித மான பிரயோஜனமும் கிடையாது.

"எங்கள் கட்சிக்குள் பிளவு இருப்பதாகச் சொல்லப்பட்டது. இன் றைக்கு எந்தக் கட்சியில் பிளவு இல்லாமல் இருக்கிறது ? எல்லா இடங் களிலும்தான் பிளவு இருக்கிறது. இன்றைக்கு எங்கள் கட்சியில் பிளவு இருக்கலாம். ஆனால், அதை வைத்துக்கொண்டு பிரமாதமாக பேசுவது தர்மம் அல்ல, நியாயம் அல்ல, அரசியல் அமைப்புக்கு நல்லதல்ல, அரசியல் தர்மத்திற்கும் உகந்தது அல்ல என்று அவர்களுக்குத் தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

"கட்சிச் சண்டை எங்குமே இல்லையா ? எங்கும் இருக்கத்தான் செய் கிறது. அபிப்பிராய பேதம் எங்கும் இருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சியில் இல்லையா ? ஸ்ரீமான் தேவர் அவர்களுடைய பார்வார்ட் பிளாக் கட்சியிலும் அபிப்பிராய பேதம் இல்லையா ? சோஷலிஸ்டு கட்சியில் இல்லையா ? அசோக் மேத்தா, லோகியா, ஜெயப்பிரகாஷ் போன்ற தலைவர்களிடையே யும் அபிப்பிராய பேதம் இருக்கவில்லையா ? இதையெல்லாம் வைத்துக் கொண்டு வீணாடுவது அவ்வளவு உசிதம் அல்ல என்று நான் ஸ்ரீமான் தேவர் அவர்களுக்கு கனம் உதவி சபாநாயகர் அவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். கட்சிச் சண்டையும் அபிப்பிராய பேதங்க ளும் எல்லா இடத்திலும் இருக்கின்றன.

"கட்சிக் கட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பெரும் பான்மையாக உள்ள ஒரு கட்சியாக இருந்தால் அங்கு கட்டுப்பாடு இல்லா மல் இருக்க முடியாது.

"கல்வியைப்பற்றி ஒரு வார்த்தை. கல்வித் திட்டத்தைப் பற்றி அது நல்லதா இல்லையா என்ற முடிவான அபிப்பிராயத்திற்கு சர்க்கார் வர வில்லை. திட்டவட்டமாக பருளேகர் கமிட்டி அதனுடைய யாதாஸ்தை தந்திருக்கிறது. நிதி சம்பந்தமான நிலவரங்களை (Financial Implications) விசாரிக்கப்போகிறார்கள். சட்ட சபைக்கு முன்னால் அதைக் கொண்டு வரப்போகிறார்கள். கொண்டு வந்த பிற்பாடு அந்தத் திட்டத்தைத் தோற்கடித்தால், யார் வேண்டாமென்று சொல்லுவார்கள் ? இதில் என்ன சூது இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை.

"ஒன்று நிச்சயமாகச் சொல்லுகிறேன். நம் அபிப்பிராயங்கள் எவ் விதமாக இருந்த போதிலும், பள்ளிக் குழந்தைகளிடம் விஷ வித்தை விதைக்கவேண்டாம் என்று அரசியல் கட்சியினரைக் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

[Sri S. N. Somayajulu] [24th February 1954

"ഇന്നത്ത് തിട്ടത്തിനുല് ഇരണ്ടു മടങ്കു അതികമാന പിള്ളകൾ പള്ളികളിൽ ചേർത്തുകൊള്ളപ്പെടുവാർകൾ. പള്ളിക്കൂടത്തിറ്കുള്ളും, വീട്ടിലും അവർകൾ വാഴ്ക്കൈക്കു വേണ്ടിയ പാടങ്കളൈക് കറ്റുക്കൊള്ളുവാർകൾ. പിള്ളൈകൾ മത്തിയിൽ വിഷ വിത്തൈത് തൂവി, തമിഴ്നാട്ടിനുടൈയ പണ്പൈയും കലാച്ചാരത്തൈയും കെടുക്കവേണ്ടാം എന്നു അവർകളൈക് കേട്ടുക്കൊള്ളുകിൻറേൻ.

"കവർണർ അവർകളുടൈയ പിരസങ്കത്തിൻ മുടിവുരൈയിൽ കല്വിയൈപ് പറ്റിക് കുറിപ്പിടുമ്പോതു ആയിരത്തിറ്കു മേറ്പട്ട പുതിയ ആരംപപ് പള്ളിക്കൂടങ്കളൈത് തിറക്കപ്പോവതാക ചൊല്ലിയിരുക്കിറാർകൾ. ആയിരം പേർകൾ വസിക്കക്കൂടിയ കിരാമങ്കളിൽ പുതിതാക പള്ളിക്കൂടം തിറക്കപ്പോകിറോം എന്നും ചൊല്ലിയിരുക്കിറാർകൾ. ഇതറ്കു എൻന അർത്തം? നമ് നാട്ടുക് കുഴന്തൈകളുക്കു കല്വി വേണ്ടാമെൻറു ചൊല്വതാക അർത്തം ചെയ്തു കൊള്ള മുടിയുമാ? കല്വി വേണ്ടാമെൻറു എവരും ചൊല്ല മാട്ടാർകൾ. അതिക്പടിയാൻ കുഴന്തൈകളുക്കു കല്വി അളിക്കപ്പടവേണ്ടും എൻപതുതാൻ ഇന്തച് ചർക്കാരിൻ നോക്കമ്. ഇന്ത നാട്ടു മക്കൾ പടിപ്പില്ലാമല് മുട്ടാൾകളാക ഇരുക്കവേണ്ടുമെൻറു എന്തച് ചർക്കാരും ചൊല്ല മാട്ടാർകൾ. ആകവേ, ഇന്നത്ത് തിട്ടത്തൈ ചന്തേകക് കണ് കൊണ്ടു പാർക്ക വേണ്ടാമെൻറു കേട്ടുക്കൊള്ളുകിൻറേൻ. ഇന്നത്ത് തിട്ടത്തൈ എതിർപ്പവർകൾ തിട്ടത്തിലുള്ള നല്ല അംശങ്കളൈ നിच്ചയമാക ഒത്തുക് കൊള്ള വേണ്ടും.

"കവർണർ പിരസങ്കത്തില് പുതുക് കല്വിത് തിട്ടത്തൈപ്പറ്റി ഒൻറും അതികമാകച് ചൊല്ലവില്ലൈ. നിതി അംശങ്കളൈച് ചർക്കാർ പരിശീലനൈ ചെയ്തു കൊണ്ടിരുപ്പതാകവും, പിറകു ഇതു ചട്ട ചപയിൻമുൻ കൊണ്ടു വരപ്പട്ടു, അതറ്കുപ് പിൻനുല ചെയ്വതാക ഇരുക്കിറതേ തവിര, അതറ്കു മുൻനുല് ഇല്ലവേ ഇല്ലൈ. ആകവേ, ഇതைപ്പറ്റി ചന്തേകപ്പടവേണ്ടിയ അവചിയമേ ഇല്ലൈ. ഇന്നത് കല്വിത് തിട്ടത്തൈ വൈത്തുക്കൊണ്ടു നാം പല്ലവി, അനുപല്ലവി, ചരണം പാടവേണ്ടാമെൻറു കേട്ടുക് കൊള്ളുകിൻറേൻ."

12–30 p.m. * SRI R. KRISHNAN :—"മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഈ നാട്ടിലെ അതിപ്രധാനങ്ങളായ പ്രശ്നങ്ങളെ ഗവമേണ്ട് ശരിയായി നേരിടുന്നുണ്ടെന്ന് നാട്ടുകാരെ ബോധ്യപ്പെടുത്തുക വിധത്തിൽ ഗവർണ്ണർ ചെയ്തിട്ടുള്ള ഈ പ്രസംഗത്തെ വിമർശിക്കാനിരിക്കാൻ നിവൃത്തിയില്ലാത്ത ഒരു ഘട്ടത്തിലാണ് ഞാൻ നില്ക്കുന്നത്. നമ്മുടെ മന്ത്രിമാരും ഗവർണ്ണർമാരും പണ്ടത്തെ ഭരണാധികാരികളെപ്പോലെയല്ല. അവർ വില്ലേജ്തോറും സർക്കീട്ട് ചെയ്യുന്ന ഒരു കാലമാണിത്. കൺസ്ട്രസ് അധികാരത്തിൽ വന്നതിനുശേഷം മന്ത്രിമാരും ഗവർണ്ണർമാരും നാട്ടിൻെറ എല്ലാ ഭാഗത്തും എത്തുന്നുണ്ട്. എങ്കിലും അവർ നാട്ടുകാരുമായി ശരിയായി ബന്ധം പുലർത്തുന്നില്ലെന്നുള്ളതാണ് വസ്തുവം നാട്ടിൽ നിലനിന്ന പല പ്രശ്നങ്ങളും ഇന്നുണ്ട്. കടിൽ വ്യവസായം അങ്ങേ അററം അധഃപതിച്ചിരിക്കുന്നു. അതുപോലെ കൃഷിക്കാരും കഷ്ടതൊഴിലാളികളും മുമ്പുണ്ടായിട്ടില്ലാത്തവിധം അധഃപതിച്ചിരിക്കുന്നു. ജനങ്ങളുടെ വരുമാനമുള്ള കുഴിവ് അങ്ങേ അററം താണിരിക്കയാണ്. വ്യവസായങ്ങൾ തകർന്നുകൊണ്ടിരിക്കുന്നു. കൈത്തറിക്കാരുടെ കഷ്ടത്തെപ്പററി ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ പറയുന്നുണ്ട്. അതിനു പരിഹാരമായി അവർക് സബ്സിഡി നൽകുന്നതാണെന്നും പറയുന്നുണ്ട്. പക്ഷെ ഈ സബ്സിഡികൊണ്ടുമാത്രം ലക്ഷക്കണക്കിനുള്ള കൈത്തറിക്കാരുടെ പ്രശ്നത്തിന് പരിഹാരം കാണാൻ സാദ്ധ്യമല്ല. എൻെറ താലൂക്കായ പാലക്കാട് താലൂക്കിൽതന്നെ അയ്യായിരത്തിനും പതിനായിരത്തിനും ഇടയ്ക്ക് കൈത്തറിനെയ്ത്തുകുടുംബങ്ങളുണ്ട്. പട്ടിണികൊണ്ടു സഹിക്കവയ്യാതെ അവരെല്ലാം വീടും നാടും വിട്ട് ഭിക്ഷതെണ്ടുകയാണ്. അവർക് ആശ്വാസം നല്കുന്നതിനു കഴിഞ്ഞ അസംബ്ലിക്കാലത്തു മലബാറിനെ പ്രതിനിധീകരിക്കുന്ന പതിനഞ്ചു എം. എൽ. ഏ. മാർ ഒപ്പിട്ട ഒരു മെമ്മൊറാണ്ടം ബഹുമാനപ്പെട്ട റവന്യൂ മന്ത്രിക്കു കൊടുക്കുകയുണ്ടായി. തൽക്കാലാശ്വാസത്തിനു അവർക്കുവേണ്ടി ഒരു കഞ്ഞിവെച്ചുപാരൽ കേന്ദ്രം തുറക്കണമെന്ന് ആവശ്യപ്പെട്ടപ്പോൾ ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി പറഞ്ഞതു് ഗവമേണ്ടിൻെറ നയം കഞ്ഞിവെച്ചുപാരൽ കേന്ദ്രങ്ങൾ തുറക്കലല്ല, അടയ്ക്കുകയാണെന്നാണ്. പട്ടിണികൊണ്ടു ആളുകൾ ഇഞ്ചിഞ്ചായി മരിച്ചുകൊണ്ടിരിക്കുന്ന ഒരു നാട്ടിൽ അടിയന്തിരമായി ആശ്വാസനടപടികളെടുക്കണമെന്ന് ഗവമേണ്ടിനു് മെമ്മൊറാണ്ടം കൊടുത്തിട്ട് അവർ അതു് കല

24th February 1954] [Sri R. Krishnan]

2-40 p.m. suffering from a kind of diabetic disease. It has been perfected by the British who wanted to emphasize the collecting agency. They overemphasized the Revenue Department because their mainstay was revenue. They wanted to control everything from the top—at the Government level, and at the Governor's level—and they wanted that all the strings of the administration should unite in one knot, at the pyramid of administration. Greater emphasis was laid on the Revenue administration and that was the main feature of the British machinery of administration. Has there been any change in this machinery after we have got the

24th February 1954] [Sri V. R. Krishna Ayyar]

freedom of the country? No, not at all. We find that the present Government also have supreme faith in two or three things which are the basic banes of our administrative machinery, namely, supreme faith in files, in the red tape and in administrative delays and this has resulted in the soul-less machinery moving on and on without anybody being able to produce any effect or make human problems felt by the administrative machinery. There is, as I said, red-tape everywhere. Then there is a supreme faith, if I may say so, in the higher levels of administrative cadre. The Tahsildar or the Agricultural Officer or the Co-operative Sub-Registrar or the Inspector has absolutely no say in the administration. Every power is centred at the Secretariat level. There is no autonomy for the administrative limbs even if any little thing has to be done at the bottom, and all power is concentrated at Madras. The Government think that there is virtue or wisdom about an order, only when it is issued in Madras. We find that there is considerable faith in the executive wisdom and that too at the top. We see that there is a supreme faith only in the Executive machinery and that if people want to associate themselves in the administration they are choked up and they are not given any share. If there are Advisory Committees constituted at every level with some powers so that decisions may be arrived at if there is democratisation of these administrative services or departments at various levels by association of popular bodies to advise and to take steps, something better might be achieved. It is absolutely necessary if this administrative machinery is to work at all, if it is to serve to any purpose, and if it is not to act as it does now in a soul-less bureaucratic manner that there must be immediately decentralization of power. There must be immediate democratization of administrative organs. If these two things are not done there is no point in saying that the Government are spending lots and lots of money. What do we find in the statistics furnished by the Government in respect of a query made in this House except that out of a lakh of rupees spent on a particular Community Project, eighty thousand rupees had been spent on Government servants and that the community which was intended to be served had practically got nothing. Unless the Government administrative machinery is completely re-orientated nothing is going to be achieved and the people are going to continue disconsolate, disgruntled and frustrated. Therefore I submit to this House that the administrative machinery must be changed for tackling the fundamental problems of the State. We have got now the same old wine, not even in new bottles but in the same old bottles. If the administrative machinery is not changed, all the problems will remain unsolved and even the challenge of the problems will remain untackled. So, I recommend to the House to give the Governor for his Address our regrets but not our thanks."

* SRI S. R. ARUMUGAM :— "கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். 2-43 p.m.

[Sri S. R. Arumugam] [24th February 1954

நமது சர்க்கார் விவசாய மக்களின் நலனை உத்தேசித்து செய்திருக்கும் பல நல்ல காரியங்களையெல்லாம் பற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக நாம் அவரைப் பாராட்டுகிறோம். குறிப்பாக இந்தச் சர்க்கார் விவசாய மக்களின் நலனை உத்தேசித்து கடன் ஒத்திவைப்பு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதைக் கொண்டு வரவேண்டிய அவசியம் என்னவென்று சிலர் கேட்கலாம். கடந்த ஆண்டுகளில் சரியானபடி மழையில்லாததால் விவசாயப் பயிர்கள் இந்த நாட்டில் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன. அதன் காரணமாக விவசாயிகள் வாழ்க்கை நடத்துவதற்கே ரொம்பவும் கஷ்டப்பட்டு தனிப்பட்டவர்களிடமும், நில அடமான பாங்குகள் போன்ற ஸ்தாபனங்களிடமும் கடன் வாங்கிவிட்டார்கள். இந்த வருஷம் சுமாராக மழை பெய்து தானியமும் விளைந்து இருப்பதால் கடன் கொடுத்தவர்கள் இவர்கள் மேல் தாவா செய்து விளைந்த தானியத்தை விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் கடனுக்காகப் பறிமுதல் செய்து கொண்டு போய் விடுவார்களோ என்ற காரணத்திற்காகத்தான் இந்தச் சட்டத்தை அவசரம் அவசரமாக இந்தச் சர்க்கார் கொண்டு வந்தது. இதனால் விவசாயிகள் ரொம்பவும் நன்மை அடைந்திருக்கிறார்கள். குறிப்பாக இந்தச் சட்டம் கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு மிகவும் பிரயோசனமுள்ளதாக இருக்கிறது. ஆனால் தனிப்பட்டவர்கள் கொடுத்திருக்கக் கூடிய கடன்களைத்தான் அவர்கள் வசூல் செய்ய முடியாதே தவிர நில அடமான பாங்குகள் மூலமாகவும், கூட்டுறவு பாங்கு மூலமாகவும் அளிக்கப்பட்டிருக்கும் கடனையும் திருப்பி வசூல் செய்வதை ஒத்திவைக்கவேண்டுமென்று இல்லாததால் இந்த பாங்குகள் இப்போது விவசாயிகளை ரொம்பவும் கஷ்டப்படுத்தி கடனை திரும்ப வசூலிக்கிறார்கள். இது மாதிரியாக பல இடங்களில் நடந்து கொண்டு வருகின்றது. இவ்வாண்டில் விவசாயிகளுக்கு நிலத்திலிருந்து கிடைக்கும் பலனை அவர்கள் அனுபவித்துக்கொள்ளும்படி செய்யவேண்டும். அது மார்வாடிக்காரர்களின், லேவாதேவிக்காரர்களின், சொத்தாக ஆகிவிடக்கூடாது என்ற உயர்ந்த கருத்தோடு அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பினும் கூட, நில அடமான பாங்குகளுக்கும் கோவாப்பரேடிவ் சங்கங்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று இல்லாததால் பல இடங்களில் விவசாயிகள் கடன்களைத் திருப்பித்தர முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள். கொடுத்த கடனை திருப்பி வசூலிக்க இவர்கள் பேரில் தீவிரமான நடவடிக்கையை கூட்டுறவு சங்கங்கள் எடுத்துக் கொண்டு வருகின்றன என்பதை சர்க்காரின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே இதை உடனடியாகக் கவனித்து இம்மாதிரியாக அவர்கள் வசூல் செய்யதவாறு தடை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக முன்பு கிணறு வெட்டும் மானியம் கொடுத்தார்கள். சரியாக கிணறு வெட்டப்படவில்லை என்பதற்காக முன்பு கொடுக்கப்பட்ட மானியத்தை இப்போது திருப்பி வசூல் செய்து வருகிறார்கள். அதைப் போலவே கந்தாயமும் வசூல் செய்து வருகிறார்கள். விவசாயிகளுக்கு இரண்டு, மூன்று ரூபாய் கந்தாயத்தைக் கட்டக் கூட சக்தி இல்லை. அவர்களிடமிருப்பது ஒரு ஆட்டுக்குட்டி, அல்லது ஒரு கன்றுக்குட்டி தான். அவர்கள் கட்டவேண்டிய கந்தாயத்திற்காக சர்க்கார் அவர்களது ஆட்டுக்குட்டியையும், கன்றுக்குட்டியையும் ஏலம் விடக்கூடிய நிலைமையில் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கட்ட வேண்டிய கந்தாயத்தைக் கட்ட முடியாமல் விவசாயிகள் எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள் என்பது கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். ஆகவே முன் கொடுத்த மானியங்களை இப்பொழுது திருப்பி வசூல் செய்வதற்காக அரசாங்க அதிகாரிகள் ஏழை விவசாயிகளின் உடைமைகளை ஜப்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்தல் மிகவும் வெறுக்கத்தக்கதாகும். இந்தக் கடன் வசூலை ஜூன் மாதம் வரையிலும் ஒத்திவைத்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும். அவர்களுடைய தானியங்கள் எல்லாம் மார்க்கெட்டில் பணமாவதற்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்களாவது ஆகும். ஆகவே அதுவரையில் குறிப்பாக ஜூன் மாதம் வரையில் இந்த வசூலை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

24th February 1954] [Sri S. R. Arumugam]

"கிராம முன்னேற்றத்தைக்குறித்தே தேசிய அபிவிருத்தித் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்ற பல திட்டங்களை வகுத்து அதன் கீழ் வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள். எந்த பிர்க்காவானது மிகவும் பிற்போக்காக இருக்கிறதோ அந்த பிர்க்காவில் தான் இந்தத் தேசிய அபிவிருத்தித்திட்டம் வேலை செய்துவருகிறது. ஆனால் இந்தத் திட்டமானது இன்னும் விரிவான முறையில் வேலை செய்யத் தொடங்கவேயில்லை. உதாரணமாக கோயம்பத்தூர் ஜில்லாவில் பல்லடம் தாலூக்கா, அவினாசி தாலூக்கா போன்றவைகளை எடுத்துக்கொண்டால் இவைகள் ரொம்பவும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகும். பல்லடம் தாலூக்காவில் ஒரு பிர்க்காவையும், திருப்பூர், அவினாசி பேரன்ற தாலூக்காவில் ஒரு பிர்க்காவையும் எடுத்துக்கொண்டு அவர்கள் வேலை செய்து வருகிறார்கள். விவசாயிகளுக்கு மின்சார வசதியும், கால்நடைகள் வாங்குவதற்கு குறுகிய காலக்கடன்களும், இன்னும் நல்ல விதைகளும் கொடுத்து நல்ல முறையில் வேலை செய்து வருகிறார்கள். இது ரொம்பவும் பாராட்டவேண்டிய விஷயமாகும். அதே சமயத்தில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட எல்லாப் பிரதேசங்களுக்கும் இதை விஸ்தரித்தால் தான் இதனால் நல்ல பலன் ஏற்படும். ஒரு பிர்க்காவில் மட்டும் இத்தகைய வசதிகளைச் செய்துவிட்டு மற்ற பிர்க்காக்களுக்கு இம்மாதிரியான வசதிகளைச் செய்யாதுபோனால் இந்த பிர்க்காக்களிலுள்ள மக்கள் மிகவும் மனவேதனைப்படுவார்கள். ஆகவே பஞ்சத்தால் அடிபட்டுள்ள எல்லா பிர்க்காக்களுக்கும் இந்த தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனர்நிர்மாண வேலைகளைச் செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜனங்களை பணம் கொடுத்து மின்சார வசதியை தங்கள் கிராமங்களுக்கு செய்து கொள்வதற்குப்பதிலாக இந்தத் திட்டத்தின்படி எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதியைச் செய்து கொடுப்பது தான் நல்லது. ஆகவே எங்கள் தாலுக்காவிற்கும் இந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சென்ற வருஷங்களில் பருவ மழை தவறியதால் கிணறுகளில் தண்ணீர் ரொம்பவும் அடியில் போய்விட்டது. அந்தக் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்க பல விவசாயிகளிடம் மாடுகள் இல்லாததால் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தத் தாலுக்காவிற்கு மின்சார வசதியை விஸ்தரித்தால் அவர்கள் மின்சாரத்தின் மூலம் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க ரொம்பவும் வசதியாக இருக்கும். மேலும் தொழிற்சாலைகளுக்கு சப்ளை செய்யும் மின்சார சக்திக்கு யூனிட் ஒன்றுக்கு 4½ பைசா தான் வசூல் செய்கிறார்கள். ஆனால் விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் மின்சார விசைக்கு அதிகமான பணம் வசூல் செய்வதாகத்தெரிகிறது. இது ரொம்பவும் வருந்தத்தக்கதாகும். காரணம் என்னவென்றால் தொழிற்சாலைகளுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் இருக்கிறது. தொழில் துறையில் நல்ல லாபம் ஏற்படுகிறது. ஆனால் விவசாயத் தொழிலுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. இது ஒரு லாபகரமான தொழிலும் இல்லை. ஆகவே தொழிற்சாலைகளுக்குச் சப்ளை செய்யப்படும் மின்சார விசைக்கு ஓரளவு சார்ஜை அதிகப்படுத்தினாலும் பரவாயில்லை. விவசாயத்திற்குச் சப்ளை செய்யப்படும் மின்சார விசைக்கு சார்ஜை உடனடியாகக் குறைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமாக நம்முடைய சர்க்கார் அதிகமான அக்கரை எடுத்துக்கொண்டு ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்பும், ஹாஸ்டல்களுக்கு கிராண்டும் கொடுத்து வருகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. கொடுக்கக்கூடிய பணம் சரியான முறையில் வினியோகிக்கப்படுகிறதா என்றும் சர்க்கார் பார்க்கவேண்டும். அதோடு இப்பொழுது இருப்பதைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பணம் ஒதுக்கினால் ரொம்பவும் பயனுள்ளதாக இருக்கும். ஹரிஜனங்களுக்குள்ள குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவது ரொம்பவும் அவசியம். நான் பூமிதான யக்யத்தின்போது எங்கள் தாலூக்காவில் பல இடங்களுக்குச் சென்றிருந்தேன். அவர்கள் குடி தண்ணீருக்காகப்படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இன்னமும் கிராமங்களில் ஹரிஜனங்கள் ஒதுக்கப்பட்டேயிருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு அவர்களை பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க அனுமதிப்பது கிடையாது. அவர்களுக்கு என்றே தனியாக கிணறுகள் வெட்டி

[Sri S. R. Arumugam] [24th February 1954

வைக்கவேண்டும். இம்மாதிரி சில இடங்களில் கிணறுகள் வெட்டப் பட்டிருக்கின்றன. ஆனால் கிணற்றில் தண்ணீர் குறைந்துவிடுகிறது. அதற்காக ரெவினியு போர்டு அந்தக் கிணறுகளை ஆழத்தோண்டிக்கொடுத்திருக்கிறார்கள். அப்பொழுது பணம் படைத்தவர்கள் அக்கேணிகளுக்கு அருகிலுள்ள தங்கள் கேணிகளை இன்னும் பள்ளமாகத் தோண்டிக்கொண்டு விடுகிறார்கள். அதனால் இந்தக் கேணிகளிலுள்ள ஜலம் அந்தக் கேணிகளுக்குப் போய் விடுகிறது. ஆகவே ஹரிஜனங்களுக்குக் கேணிகள் வெட்டிக்கொடுக்கும் போதே அந்தக் கேணிகளுக்கு அருகில் யாரும் வேறு ஆழமான கேணிகள் தோண்டக்கூடாது என்று உத்தரவு போடவேண்டுமென்று நான் சர்க் காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் ஹரிஜனங்களின் குடி தண்ணீர் கஷ்டம் தீரும். அவர்களுடைய குடிதண்ணீர் கஷ்டத்தை நீக்கு வது சர்க்காரின் கடமை, முதற் பொறுப்பாகும் என்று சொல்லிக்கொண்டு, சர்க்காரும் தன் கடமையைச் செய்யும் என்ற நம்பிக்கையோடு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

2-54 p.m. Sri S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் நிகழ்த்தியிருக்கும் பிரசங்கத்தில் பல விஷயங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று இந்தப் பக்கத்தில் இருக்கக்கூடிய பல அங்கத்தினர்கள் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

" கவர்னர் அவர்கள், தங்களுடைய பிரசங்கத்திலே இந்தச் சட்டசபை காலத்திலே பல மசோதாக்களைப்பற்றி நாம் கவனம் செலுத்தவேண்டும், அவைகளை விவாதித்து சட்டமாக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், சென்ற சட்டசபை காலத்திலே சர்க்காரால் ஜமீன் ஒழிப்பு சட்டத் திற்கு ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. அந்தத் திருத்த மசோதா நிறைவேற்றப்படவில்லை. அப்பொழுது அது கைவிடப்பட்டிருக் கிறது. அந்தக் காலத்தில் சர்க்கார் கட்சி அங்கத்தினர்களும், எதிர்கட்சி அங்கத்தினர்களும் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருக் கின்றனவென்றும், அவைகளை சர்க்காருக்கு வலியுறுத்திக் கூறினார்கள், நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று. இன் றைக்கு இருக்கக்கூடிய சட்டத்திலே பல ஓட்டைகள் இருக்கின்றன. பல இனாம்கள் இப்பொழுது உள்ள சட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எல்லா இனாம்களும் சட்டத்தின் கீழ் வரக்கூடிய முறையில் சட்டம் திருத்தப்பட வேண்டும். இதற்காக வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கும் என்று ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டுமென்று கவர்னர் அவர்கள் பிரசங்கத்தில் குறிப்பிட்டி ருக்கவேண்டும். அதைக் குறிப்பிடத் தவறியிருக்கிறார்கள் என்பதை சபை யின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

" சென்ற வருஷம் தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டமானது நிறைவேற்றப்படும்போதே, தஞ்சை ஜில்லாவிலிருந்து வந்திருக்கக்கூடிய அங்கத்தினர்கள் எல்லோரும் அதில் இருக்கக்கூடிய பல குறைபாடுகளை சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆனால், அப்பொழுது சர்க்கார் கட்சியிலுள்ளவர்கள், அதை ஒத்துக்கொள்ளாமல், நடைமுறையில் இந்தச் சட்டம் வந்த பிறகு, அந்த அனுபவத்திலிருந்து காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு ஏற் பாடு செய்யலாம் என்று கூறினார்கள். சட்டம் அமுலுக்கு வந்து ஒன்றரை வருஷம் கடந்துவிட்டது. தஞ்சையில் இருக்கக்கூடிய மிகப் பெரிய ஸ்தாபன மான விவசாயச் சங்கமானது அந்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைப் பற்றி சர்க்காருக்கும் குறிப்பாக நமது முதல் மந்திரி அவர்களுக்கும் பல மகஜர்கள் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இருந்தும்கூட, இந்தச் சட்டத்தை திருத்தவேண்டாமா அல்லது என்ன முறையில் திருத்தவேண்டும் என்பதைப்பற்றி எந்தவிதமான குறிப்பும் கவர்னர் பிரசங்கத்தில் காணப்பட வில்லை. குறிப்பாக அந்தச் சட்டத்தைப்பற்றி சென்ற காலத்தில் சொன்னோம். ஒரு வேலிக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கக்கூடிய சிறு நிலச்சுவான்தார் களை அந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது. ஆகவே அவர்கள் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றவேண்டுமானாலும், வேறு எதைச் செய்ய வேண்டுமானாலும் செய்ய சகல வசதிகளும் கொடுத்திருக்கிறார்கள்.

24th February 1954] [Sri S. Ramalingam]

அந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு, இன்றைக்கு சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் குறைந்தபக்ஷ சலுகைகள் கூட சாதாரண விவசாயிகளுக்கு கிடைக்காத முறையில் செய்து வருகிறார்கள். ஒருவருக்கு 4, 5 வேலி நிலம் சொந்தமாக இருந்தாலும், இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டுமெனபதற்காக, தங்களுடைய உற்றார் உறவினர்கள் பேருக்கு பாகம் எழுதிக்கொடுத்துவிட்டதாகக்காட்டி அல்லது வேறு ஆசாமிக்கு விற்றுவிட்டதாக சொல்லி சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறார்கள். தங்கள் இஷ்டப்படி வாரக் குத்தகையை விவசாயிகள் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். அப்படிக் கொடுக்கத்தவறினால் அவர்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்திவிட அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி இன்றைக்குப் பலவிதத்தில் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி விவசாயிகளும் மற்ற ஸ்தாபனங்களும் சர்க்காருக்கு எடுத்துக் சொல்லியும்கூட சர்க்கார் இது வரையில் எந்த கவனமும் செலுத்தவில்லை. இந்தச் சட்டத்தை திருத்துவதுபற்றி கவர்னருடைய பிரசங்கத்திலும் குறிப்பிடப்படவில்லை.

"ஜில்லாக்களில் பல இடங்களில் நெற்பயிர்களுக்கு பூச்சி விழுதல் போன்ற வியாதியினால் தொந்தரவு ஏற்பட்டு நாசம் அடைந்திருப்பதாகவும், விவசாய இலாக்கா அதிக கவனம் செலுத்தி அதைத் தடுத்துவருவதைப்பற்றி திருப்தி தெரிவித்தும் பாராட்டியும் கவர்னர் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். அது மாதிரி சில இடங்களில்தான் விவசாய இலாக்கா நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"ஆனால் தஞ்சை ஜில்லாவில் மட்டும் ஒரு பிரத்தியேகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் மழை பெய்ததினால், மேட்டூர் அணைக்கட்டில் தண்ணீர் நிறைந்திருந்ததினால் ஓரளவு சிரமப்பட்டு விவசாயிகள் நல்லபடியாக சாகுபடி செய்து இருக்கிறார்கள். அறுவடை காலத்தில் சென்று பார்த்தால் சாதாரணமாக 10 மூட்டை கிடைக்கக்கூடிய இடங்களில் கதிரிலே தானியங்கள் இருப்பதைப் பார்க்கும்போது 12 மூட்டை கூடகாணும் என்று நம்பக்கூடிய அளவுக்கு பயிர்கள் வளர்ந்திருந்தன. அறுவடை செய்து அடித்துப் பார்த்தால் 4 கலம் கூடக் கிடைக்காமல் கருக்காயாகப்போய்விட்டது. இந்த மாதிரி புது தினுசான வியாதி தஞ்சை ஜில்லாவில் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லா பூராவிலும் அனேகமாக எல்லா தாலூகாக்களிலும் இந்த நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. பயிரைப் பார்த்தால் அழகாகத்தான் தோன்றும். நல்ல மகசூல் காணும் என்று எதிர்பார்க்கப்படும். அறுவடை செய்தால் பெரிய ஏமாற்றத்தை அளிக்கக்கூடியதாக மகசூல் குறைந்து இருக்கிறது. இதனால் என்ன கஷ்டம் ஏற்படுகிறதென்றால் தஞ்சாவூர் ஜில்லாவிற்கு போடப்பட்ட அந்தச் சட்டம் பெரிய அளவு விவசாயிகளுக்குப் பாதகம் அளிக்கும்படியான நிலைமையை உண்டுபண்ணிவிட்டது.

"ஒரு விவசாயி இத்தனை கலம் குத்தகை கொடுக்கவேண்டுமென்று குத்தகைப் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தால், அத்தனை கலம் நிலச்சுவாந்தாருக்கு அளிக்கவேண்டும். அளிக்கத் தவறினால், ரெவினியூ அதிகாரிக்கு மனுச்செய்து நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தி, நிலத்தைத் திருப்பி நிலச்சுவாந்தார் வாங்கிக்கொள்ளுவதற்கு தஞ்சை சட்டத்தில் வசதியளிக்கப்பட்டிருக்கிறது.

.. "இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டதனால் பல்லாயிரக்கணக்கான தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு அவர்கள் ஒத்துக்கொண்ட குத்தகைப்படி, குத்தகை மகசூலை அளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் தஞ்சை ஜில்லாவில் சென்ற மாதத்தில் மிகப் பெரிய கிளர்ச்சி இருந்ததாக பத்திரிகையிலே பார்த்திருக்கலாம். தஞ்சை ஜில்லாவிற்குப் போலீஸ் போயிருக்கிறது. ஸ்பெஷல் ஆயுதம் தாங்கிய போலீசின் உதவியைக் கொண்டு அறுவடை நடக்கிறதென்று பத்திரிகையில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. அதற்கு முக்கியக் காரணம் இந்த மாதிரி எதிர்பாராதவிதமாக பூச்சித் தொந்தரவு ஏற்பட்டதுதான். ஏனென்றால் விவசாயிகள் தாங்கள் ஒத்துக்கொண்ட அளவு வாரம் குத்தகை கொடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டதால், அதைக்கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தபடியினால் குத்தகை

யைக் குறைத்து வாங்கிக்கொள்ளவேண்டுமென்று நிலச்சுவாந்தார்களைக் கேட்டுப்பார்த்தார்கள். அவர்கள் சம்மதிப்பதாக இல்லை. அதிகாரிகளிடம் மனுச்செய்து கொண்டால், 'புயலும் இல்லையே, வெள்ளமும் இல்லையே, தண்ணீரும் வந்திருக்கிறது; விளைச்சலும் நல்லப்படி இருக்கிறது. ஆகையால் குறைத்துக் கொடுக்கும்படி உத்தரவு போடுவதற்கு எங்களுக்கு சட்டத்தில் அதிகாரம் இல்லை. ஆகையால் குறைத்துக்கொடுக்கும்படி அனுமதி கொடுக்கமுடியாது' என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதன் காரணமாக நிலச்சுவாந்தார்கள் போலீசுக்கு தந்தி கொடுத்துவிட்டு நெல் அறுவடைசெய்கிறார்கள். ஆயுதம் தாங்கிய போலீஸ் வந்த பிறகு அறுவடை செய்யப்படுகிறது. எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சர்க்கார் அதிகாரிகள், அல்லது விவசாய இலாக்கா அதிகாரிகள் அங்கு இருந்த நிலைமையை மேலிருந்தவாரியாக பார்த்துக்கொண்டு அவர்கள் ஏமாந்துபோய்விட்டார்கள். விவசாயிகளும் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை அந்த ஜில்லாவில் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் கதறுகிறார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை.

"தஞ்சை ஜில்லாவில் சிறு நிலச்சுவாந்தார்களும் இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றிரண்டு வேலி நிலங்களை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு சாதாரணமாக சரிபாதி கண்டுமுதல் கூட ஆகவில்லை.

"சென்ற வருஷம் அதிகப்படியான விலைக்கு விற்றதனால், தங்களுக்கு ஏதாவது மிச்சம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த சிறு நிலச்சுவாந்தார்களெல்லாம் சாகுபடி செலவு அதிகமாகச் செய்திருக்கிறார்கள். சென்ற பல ஆண்டுகளாக அவர்கள் செய்த செலவைக்காட்டிலும் உரம், தழை முதலியவற்றிற்கு இவ்வருஷம் அதிகமாக செலவு செய்து எப்படியாவது உற்பத்தியை அதிகப்படுத்தி தங்களுக்கு ஆதாயம் கிடைக்கவேண்டுமென்று சிரமப்பட்ட அவர்களுக்கு இப்பொழுது நஷ்டந்தான் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காரணங்களினால் சர்க்கார் வரி வஜா போன்ற சலுகைகள் செய்து தரவேண்டுமென்று சொன்னால் கொடுக்கப்படும் என்று நம்பமுடியவில்லை.

"ஏற்கனவே அங்கிருக்கும் கணக்குப் பிள்ளைகள் போன்ற கிராமாதிகாரிகள் சாகுபடிகண்டு முதல் 10 அணா, 12 அணா 15 அணா காணும் என்று அதிகப்படியான மகசூல் கிடைக்குமென்று எழுதிவைதிருக்கிறார்கள். இரண்டு அணாவுக்குக் குறைவாக கண்டுமுதல் கிடைத்தால்தான் வரி வஜா (remission) கொடுக்கப்படும் என்று ரெவினியூ போர்டு உத்தரவு இருக்கிறது. அப்படி யிருப்பதால், அவர்களுக்கு வரி வஜா போன்ற சலுகையும் கிடைக்க இடமில்லை. இதனால் விவசாயிகளுக்கு மிகவும் பாதகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

"சென்ற வருஷத்தில் ரூ. 25-க்கு நெல் மூட்டை விற்றது. விலையை குறைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற ஒரு கேள்வி கேட்டதற்கு, ரொம்ப நியாயமான விலையாகத்தானே தெரிகிறது என்று நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். அதிகமான விலை என்று ஒத்துக்கொள்ளவில்லை. ஒரு மூட்டை ரூ. 12, ரூ. 13க்கு கூட இப்பொழுது போவதில்லை. அதிக பட்சமாகக் கிடைத்தால் ரூ. 14-க்குப்போகும். இதனால் அவர்கள் பல கஷ்டங்கள் அடைந்திருக்கிறார்கள். பழைய விலையில் பாதி விலைக்குக் கூட இன்றைக்கு மார்க்கெட்டில் போகவில்லை. சர்க்கார் லெவி விலைகூட கிடைக்கவில்லை. ரூ. 12-க்குத் தான் மார்க்கெட்டில் போகிறது. உபரி தானியத்தை கொள் முதல் செய்வதைப்பற்றி யோசிக்க அதிகாரிகள் கூட்டம் நடந்ததாகப் பத்திரிகையில் வந்தது.

"இந்த மாதிரி நிலைமை இருந்தாலும்கூட பெருநிலச் சொந்தக்காரர்களுக்கு எந்தவித பாதகமும் இல்லை. உடனே நெல்லை விற்கவேண்டிய அவசியமும் அவர்களுக்குக் கிடையாது. இன்னும் ஒரு மாதம் கழித்தோ, 4 மாதங்கள் கழித்தோ விற்றால் விலை ரூ. 25, ரூ. 26-க்குப் போனாலும் போகலாம். அப்பொழுது அதிகமான லாபம் சம்பாதித்துக் கொள்ளமுடியும். ஆனால் சிறு நிலச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய நெல்லை உடனே விற்றால் தான் அவர்கள் கிஸ்தி கட்டமுடியும். போன

24th February 1954] [Sri S. Ramalingam]

வருஷம் அவர்கள் சர்க்காரிடமிருந்து உரம் முதலியவற்றிக்கு வாங்கிய பணத்தைத் கட்டவேண்டும். இல்லாவிட்டால் கெடுபிடி வரி வசூல் ஆரம்பிக்கப்படுகிறது.

"பத்து நாட்களுக்கு முன்பு இராமனுதபுரம் ஜில்லாவிற்கு நான் சென்றிருந்தேன். சென்றகாலத்தில் கொடுக்கவேண்டிய கிஸ்தி பாக்கியை வசூலிக்க அங்கிருக்கக்கூடிய சர்க்கார் அதிகாரிகள் என்னென்னவோ செய்கிறார்கள். சர்க்கார் அதிகாரிகள் கிஸ்தி பாக்கியை வசூலிப்பதற்காக செய்யும் அட்டூழியம் மிக்க கேவலமாக இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமையை சினிமாவில்தான் பார்த்திருக்கிறோம். ஏழு, எட்டு பேர்கள் வீட்டுக்குள் நுழைந்து, சாமான்களை வெளியில் போட்டு ஜப்தி செய்யும் காட்சியை சினிமாவில் பார்த்து இருக்கின்றோம். அம்மாதிரியான ஒரு நிலைமை அந்த ஜில்லாவில் இருந்து வருகிறது.

"இராமனுதபுரம் ஜில்லாவில் பெண்கள் மூக்குத்திகளைக்கூட விற்று சர்க்காருக்கு கிஸ்தி செலுத்தக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். பெண்களுடைய நகைகளைக்கூட விற்று சர்க்காருக்கு வரி செலுத்தவேண்டும் என்று ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் ஒரு தடவை சொல்லியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு தாலியை தாங்களாகவே விற்று கொடுக்காவிட்டால் அதிகாரிகள் தாலியை அறுக்கிறார்கள். அந்த அதிகாரிகள் தாலிக்குப் பக்கத்தில் இருக்கின்ற குண்டுகளைக் கழற்றி வாங்கிக்கொண்டு போவதை நான் அங்கு பார்த்தேன்."

* SRI S. THINAKARASAMI THEVAR :—"Mr. Speaker, Sir, first of all I should like to congratulate the Governor on the address he has delivered. My thanks are specially due to the importance given by this Government for the speedy execution of the Vaigai and Amaravathi schemes. The people of Madurai district, especially of Tirumangalam taluk, are grateful to the Government for their having taken up the execution of the Vaigai scheme. All along, the people of Tirumangalam taluk, a poverty-stricken area, have been clamouring for an irrigation scheme which would provide adequate water-supply for their fields.

"It should be mentioned in this connection that the bulk of the population in Tirumangalam taluk are Kallars, ex-criminal tribes. In the whole of South India they are the most backward among all the backward communities and most neglected and most uncared for community in the south. I may say in this connection that the vast population of Kallars comprising six to seven lakhs were registered as criminal tribes and were governed by rules and regulations all these thirty years. Only three or four years ago, thanks to the Government in power at that time, the Kallars were removed from the purview of the Criminal Tribes Act. That credit goes to the Congress which was in power three or four years ago. Due to their being kept under subjugation all through the years when the Britishers were ruling us, the Kallars are the most poverty-stricken people. The major bulk of them are agriculturists. All along, they had been subject to so many untold sufferings and civil disabilities, due to their being classified as criminal tribes. We are specially thankful to the previous Congress Government for removing the Kallars from the list of criminal tribes and our thanks are due to the present Government for providing us with the Vaigai scheme, which would improve the lot of our agriculturists to a great extent.

[Sri S. Thinakarasami Thevar] [24th February 1954

"In this connection, let me congratulate the Government on their having set up a Kallar Reclamation Department under the administration of the Director of Harijan Welfare. Let me inform the House that out of a population of six to seven lakhs of Kallars, there are only two representatives in the Legislative Assembly. (Sri S. Ramalingam: 'ஆறு ஏழு பேர் இருக்கிறார்கள்.') I do not mean the Thevars. They may be six or seven. So far as the Piramalai Kallars are concerned, out of a population of seven lakhs, there are only two representatives, mind you, only two representatives, to represent their cause here on the floor of the House. It should be noted in this connection that for the past forty years from the inauguration of the Madras Legislature there was no representative at all so far as this Piramalai Kallar community was concerned. Thanks to the advent of the Congress, the condition of the Kallars has somewhat improved. I must thank the Government for the efforts they have made for the uplift of the most backward, most neglected community, I mean the Kallar community. Of course, I am a representative here of that community. I must voice forth the grievances of the Kallars in the hope that suitable action to redress those grievances would be taken by the Government.

"It is true that the Kallar Reclamation Department has been spending several lakhs of rupees for the uplift of the economic condition of the Kallars. But still the majority of our population are backward. This is so both in the economic and educational spheres. Out of a population of seven lakhs, we do not have sufficient representation in the services. There are hardly two or three Gazetted Officers. I plead earnestly that some concessions should be given to the Kallar community in the matter of appointments to public services, inasmuch as we are the most backward community in the whole of South India. No doubt in the matter of education, our boys have been given boarding grants and scholarships. But inasmuch as our population is large, and most backward, I plead for some more concessions in the matter of grant of educational concessions to our boys and girls.

3-10 p.m. "There are only one or two boarding homes in my taluk. There should be at least a dozen boarding homes for the benefit of the boys of the Kallar community. Though we are agitating for this for the past ten or fifteen years, the Government have not come forward to help these poor boys. I request the Government to give special attention to this matter so that a large number of boys may be educated. I must say that the Government must continue the department in charge of Kallar Reclamation for a period of not less than ten years at least and thereby improve the lot of this community. I must also point out that 90 per cent of the people of this Kallar community are agriculturists. The Government should offer them sufficient help by giving them loans and by supplying them with seeds and agricultural implements. I request the Government to render all possible help for the general uplift of this very backward community.

24th February 1954] [Sri S. Thinakarasami Thevar]

"The Government have recently introduced the National Extension Service Scheme in my taluk. It is a matter for gratification that the bulk of the population are offering their best help and co-operation to this scheme. As an instance in point, I may say that in the village of Urandaurappamu, the Government gave only a stipend of Rs. 500. On the other hand, the people of the village have contributed a sum of Rs. 10,000 by way of labour alone. So to say, in each and every village the people are co-operating with the Government. In Tirumangalam taluk there has been the best co-operation from the people. The Government only contribute a small sum of Rs. 500 but the contribution of the villagers by way of labour is more than Rs. 5,000. This has been published in Government pamphlets and Tirumangalam stands first so far as this residuary Madras State is concerned. This shows that the people of this locality are pakka labourers. They are willing to do any sort of work for the uplift of the village.

"Now, I shall refer to the Vaigai scheme. My area has been the most affected and most poverty-stricken area. The people have suffered a lot due to the frequent failure of the monsoons and frequent failure of crops. The Government are bound to show special preference to the members of this community and they must provide irrigation facilities by extending the Vaigai scheme specially to Tirumangalam taluk. There is even some doubt as to whether the Tirumangalam taluk is to be benefited or not by this scheme. The Government should bear in mind that this is an ex-criminal tribe area and should take every step to improve the lot of the people in this area."

* **Sri K. R. VISWANATHAN** :—"கனம் அவைத்தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் உரையின் பேரில் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். முதலாவதாக, கவர்னர் அவர்கள் பேசியபோது நாட்டின் நிலைமையானது இப்போது மிகவும் முன்னேற்றமடைந்து இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆங்காங்கு மழைப் பெய்ததின் காரணத்தினால் பயிர்கள் செழிப்புற்று விளைவு அதிகமாக கண்டிருக்கிறது. இந்த ஆண்டிற்கு முன் ஆண்டுகளில் பஞ்சம் தலை விரித்தாடிக்கொண்டிருந்தது. அப்படி பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்னும் சில இடங்களில் பஞ்சம் நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. ஆதலால் பஞ்சம் எங்கும் தீர்ந்துவிட்டதாக சொல்லிவிட முடியாது. மற்ற இடங்களில் பஞ்சம் இல்லாத காரணத்தினால் அந்த இடங்களில் நிவாரண வேலைகளுக்கு அவசியம் இல்லை. அதனால் தொடர்ந்து பஞ்சமாக உள்ள இடங்களில் பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பித்து ஆங்காங்கு நிவாரணம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். 3-15 p.m.

"அடுத்தப்படியாக கவர்னர் தன் பிரசங்கத்தில் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள பழுப்பு நிலக்கரி சுரங்கத்தைப் பற்றி மிகவும் மிகைப்படுத்தி கூறியிருக்கிறார். இதனால் பலன் அதிகம் உண்டென்று சொல்லப்படுகிறது. வர்த்தக ரீதியில் லாபகரமாக இதை நடத்த மூலதனம் பெறுவது, நிர்வாக அமைப்புபற்றி சர்க்கார் பரிசீலனைச்செய்து வருவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்காரின் ஆலோசனைக்கு நான் சில யோசனைகள் சொல்ல விரும்புகின்றேன். மூலதனம் போடும் உரிமையையும் நிர்வாக அமைப்பையும், வடநாட்டு அல்லது அந்நிய நாட்டு முதலாளிகளை நம்பியும் அவர்கள் கையில் விட்டுவிடக்கூடாதென்று முதலாவதாக அரசாங்கத்தை வேண்டிக்கொள்ளுகிறேன். தமிழ்நாட்டு மக்கள் இதனால் பெரும்பயன் அடையும்படி இவைகள் இரண்டையும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று யோசனை கூறுகிறேன். இப்பொழுது சுரங்கத்திற்கு வேண்டியதற்காக

[Sri K. R. Viswanathan] [24th February 1954

பல கிராமங்களையும் அவைகளைச் சேர்ந்த நிலங்களையும் ஆக்கிரமித்து வாங்கிக்கொண்டு அவைகள் சுரங்கப் பகுதிகளாக ஆக்கப்படுகின்றன. நிலத்திற்கு பதிலாக காம்பன்ஷேசன் (compensation) நஷ்டஈடு தொகைகள் கொடுக்கப்பட்டுவருகின்றன. கொடுக்கப்படும் தொகைகளை பங்குத்தொகைகளாக ஆக்கி பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவரும் பங்குதாரர்களாக ஆக்கப்பட்டு, கூட்டுறவு முறையிலே ஒரு மூலதனம் அமைப்பதோடு நிர்வாக அமைப்பில் அந்த வட்டாரத்தில் இருக்கும் நிலக்கிழவர்களை கூட்டுறவு முறையில் சேர்க்கவேண்டும். அந்த வட்டார விவசாய பெருமக்களுக்கு இது ஒரு நல்ல வரவேற்கக்கூடிய செய்தியாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

" தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், தென் கன்னட குடிவார விவசாய சீர்திருத்தச் சட்டம், விவசாய மக்களிடையே அமைதியை ஓரளவு ஏற்படுத்தி இருக்கிறது. திருச்சி ஜில்லாவிலும் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவரவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. பலரும் பேசி இருக்கிறார்கள். ஏதாவது குழப்பம் ஏற்பட்டால்தான், அதாவது குத்து, கொலை முதலிய கலாட்டாக்கள் நடந்தால்தான், சர்க்காரும் நடவடிக்கையை ஜரூராக எடுக்கிறார்கள். இனியும் இவ்விஷயத்தில் அவ்வாறு இல்லாமல் அரசாங்கம் சீக்கிரம் திருச்சி ஜில்லாவிற்கும் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தப்படியாக இப்போது கொண்டுவந்திருக்கும் கடன் ஒத்திவைப்பு மசோதா விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கிறது. இதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். கிணறு வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்ட கடன்களை ஒத்திவைக்க முடியாதென்று சொல்லுகிறார்கள். கடன் ஒத்திவைப்பு மசோதா சர்க்கார் கடன்களுக்கும் செல்லுபடியாக வேண்டும் என்பது எங்கள் வேண்டுகோள். உடையார்பாளையம், பெரம்பலூர் தாலூக்காக்கள் வறண்ட பிரதேசங்களாக இருக்கின்றன. இங்கே தண்ணீர் வசதி மிகக் குறைவாக இருக்கிறது. கிணறு வெட்டுவதற்கு ஓரளவு கிணறு மானியம் சர்க்காரால் வழங்கப்பட்டது. அந்த மானியம் திருப்பி வாங்கப்படுவதை ஒத்திவைக்கவேண்டும் என்று சட்டசபை உறுப்பினர்கள் கேட்டதற்கிணங்கி உத்தரவிடப்பட்டது. மறுபடியும் அந்த உத்திரவை ரத்து செய்து அந்தக் கிணறுக் கடன்களை வசூல் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

" கவர்னர் அவர்கள் தங்கள் பிரசங்கத்தில் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் சர்க்கார் வருமானத்தில் சலுகை அளித்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் நிலை சீர்பட வேண்டி செலவழிக்கப்படும் செலவுக்கு சர்க்கார் வருமானத்தில் முதல் பிரதானம் கொடுக்கப்படுகிறது என்றார்கள். உபகாரச் சம்பளத்திற்கும் சாப்பாடு மானியத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை சமீபத்தில் அதிகப்படியாக்கப்பட்டு இருக்கிறதென்றும் ஹரிஜனங்களுக்காக புதியதொரு திட்டம் தயாரிக்க உத்தேசித்திருப்பதாகவும் சொன்னார்கள். ஜனத்தொகைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு துறையிலும் அவர்களுக்கு சர்க்கார் சலுகை காட்ட ஏன் முன்வரக்கூடாது? பிற்பட்ட வகுப்பு ஏழை மாணவர்களுக்கு பள்ளிக் கட்டணங்களுக்கு கொடுக்கப்படும் சலுகை சரியானபடி அவர்களுக்குப் போய் சேருவதில்லை. பள்ளிக்கூடம் கட்ட நிதி வேண்டும் என்று பல மானேஜ்மெண்டுகள் இந்த அரைச் சம்பளச் சலுகையையும் சரியாகக் கொடுப்பதில்லை. ஆதலால் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்கள் வகுப்பைப்பற்றியோ அல்லது ஏழ்மை நிலையைப்பற்றியோ கொடுக்கப்படுமாயின் உடனே இந்தச் சலுகை வழங்கப்படவேண்டும். முதலில் முழுச் சம்பளமாக கட்டி பிறகு பாதிச் சம்பளத் தொகையை வாபீசு பெற வேண்டும் என்ற நிபந்தனை கூடாது. அங்ஙனம் சர்க்கார் தரும் சலுகையைத் தடை செய்யும் மானேஜ்மெண்டுகளைத் தண்டிக்கவேண்டிய விதிமுறைகளை சென்னை கல்வியிலாகா விதிகளில் புகுத்தவேண்டும். உணவு விடுதியிலும் ஹரிஜன மாணவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அதிகப்படியான சலுகை அளிப்பதாக தெரியவில்லை. பிற்பட்ட வகுப்பினர்களுக்காக தனி உணவு விடுதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். இவர்கள் ஜனத்தொகை விகிதாசாரப்படி உத்தியோக விஷயத்திலும் இந்த

24th February 1954] [Sri K. R. Viswanathan]

வகுப்பினர்களுக்கு சலுகை அளிக்கப்படவேண்டும். இவர்களுடைய ஜனத் தொகைக்கு ஏற்றவாறு உத்தியோகங்கள் வழங்கப்படவில்லை. இதை ஒரு குற்றமாக, அரசாங்கத்தின் மீது சாட்டுகிறேன். முக்கியமாக எடுத்துக் கொண்டால் கனம் முதல் மந்திரியார் பிற்பட்ட வகுப்பினரிடத்தில் அனுதாபம் காட்டக்கூடியவர், அன்பு கொண்டவர், கருணையுள்ளவர் என்று சொல்லவேண்டும். ஆனால் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சலுகை அளிப்பதில்தான் கொஞ்சம் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள்.

"இன்றைக்கு மந்திரி சபையில் மொத்தம் 12 மந்திரிகள் இருக்கிறார்கள். இங்கு சரியானபடி சர்க்கார் மேற்கொண்டுள்ள வகுப்புவாரி விகிதாசாரப்படி இருக்கவேண்டுமானால் 100-க்கு 25 அதாவது, 12 பேருக்கு 3 பேர் பிற்பட்ட வகுப்பை சேர்ந்தவர்களாகவும், 2 பேர் தாழ்த்தப்பட்ட உறுப்பினராகவும் இருக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக இரண்டு பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மந்திரிகளும், ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மந்திரியும் இந்த மந்திரி சபையில் காணப்படுகிறார்கள். ஆதலால் சர்க்கார் அவர்கள் ஒப்புக்கொண்ட விகிதாசாரப்படி இந்த மந்திரிசபையில் பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் இடம் அளிக்கப்படவில்லை."

* SRI A. APPU :—"Mr. Speaker, Sir, I thank His Excellency the Governor for his address. His Excellency was in the district of Malabar this month, and he had an extensive and a very successful tour."

SRI V. R. KRISHNA AYYAR :—"On a point of order, Sir. May I have from the Speaker an authoritative pronouncement as to whether the phrase 'His Excellency' is still in vogue? Except in diplomatic language, the phrase has been dropped."

MR. SPEAKER :—"For the sake of courtesy, the hon. Member is using it.

"Let the hon. Member continue his speech, as I have allowed him only five minutes."

* SRI A. APPU :—"His Excellency has given a very good impression. The meetings he addressed were attended by a large number of people, and all people were singing in praise of His Excellency.

"His Excellency said in his address that seasonal conditions were very good in the districts. But it was not so so far as our district (Malabar) was concerned. North-east monsoon was not at all a success; there was withering of crops in many places in the district, particularly in South Malabar. I hope the Government will call for a report from the Collector of Malabar and take steps to give remission of land revenue in these areas. So far as Malabar is concerned, rules regarding the grant of land revenue remission are very peculiar. I understand that there must be complete failure of crops to entitle a land to land revenue remission so far as wet lands are concerned, and that that rule is a Board's Standing Order. The Board of Revenue is subordinate to the Government. It is up to the Government to consider the matter and direct the Board to revise its Standing Order and see that remission is granted to those who have suffered by the failure of their crops.

[Sri A. Appu] [24th February 1954

"I wish to say a few words about food. In all my previous speeches, I have been saying that Malabar has been getting rice of a very bad quality. The Commissioner of Civil Supplies visited our district in December last. Several persons including officials showed him huge stocks of rice which was unfit for human consumption. I request the Government to supply good quality rice to us. I read in the newspapers that a huge stock of rice is lying unutilized in the Tanjore district and that the cultivators have complained to the Government that the procuring agents are not purchasing the stock. So far as our district is concerned, the zonal system has not been removed. I request the Hon. Minister for Food to issue at least permits to the people of Malabar to bring rice from Tanjore district, so that we can have good quality rice. When I put a question about this, the Hon. Minister for Food replied that he had to consider the question of price. We are prepared to pay any price if we are given good rice.

"Unemployment is very acute in our district and labourers do not get any work at all. Even in industrial concerns, labourers are getting work only for two or three days in a week. I hope the Government will do something to relieve the distress. At least some cottage industries can be started. I understand that there is a District Industries Officer for our district. But many of the people of Malabar do not know about the existence of such an officer. I hope the Government will issue instructions to the Director of Industries and Commerce to see that some cottage industries are started in our district."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—"On a point of information, Sir."

MR. SPEAKER :—"I have allowed only five minutes for the hon. Member. Let him finish his speech. Then I will allow the hon. Member Sri T. C. Narayanan Nambiar to raise the point of information."

3-30 p.m. * SRI A. APPU :—"So far as irrigation is concerned, there is the major scheme in Malabar, namely, the Malampuzha Project. This is nearing completion. It is a very successful project. But it will benefit the people of one taluk only. There is need for starting minor irrigation works in the remaining taluks of the Malabar district."

MR. SPEAKER :—"The hon. Member's time is up. Sri K. Uppi Sahib will now speak."

* SRI K. UPPI :—"Mr. Speaker, Sir, I join the chorus of thanks to His Excellency the Governor for his very good and concise Address. Even an inveterate opponent of the Government had to say that all that His Excellency had stated were facts but also that he had stated what his Government would do in future. I say that the Governor has stated in his Address what his Government will be doing in the next year or at least in the period between now and the next session. He has stated what the Medical, Health,

24th February 1954] [Sri K. Uppi]

Food and Education Departments of the Government will do. I am thankful to His Excellency the Governor for one sentence in the very beginning of his address. He has stated ' Peace and harmony can be maintained on either side, only if the educational and other amenities justly due to minorities are respected '. Though he referred to a small minority in Chittoor district border, I appeal to this Government to make a note of this and widen the scope of the term ' minorities '. I have given notice of an amendment to the Motion of Thanks to the Governor's Address, and my amendment reads—

' *Add* at the end the following :—

" but regret to note that the Governor has not been fully and correctly informed of the disquieting conditions prevailing among all sections of people due to general depression in trade and industry and consequent unemployment and of the grievances of the minorities in the matter of facilities for education especially in getting admission to technological and professional institutions." '

We minorities find it very difficult to get admission for our children in colleges, especially in technological, medical and engineering colleges of this State. I appeal to the Government within the short time at my disposal to look at the minorities, namely, Christians, Muslims and other minorities like us, with leniency, sympathy and generosity. This is all I have to say for the time being.

" Sir, uncharitable remarks have been made about Prohibition. A section of people want to scrap it. It is not on humanitarian grounds they want to scrap it, but they want to scrap it for political reasons. It is said that Prohibition has not been a success. I do not say so. The Government will not say, I hope, that Prohibition in this State has been a one hundred per cent success. It is not so. I admit that it is a 50 per cent or 40 per cent success. Even 40 per cent success is a great thing. I am a villager, and I have talked to the erstwhile drunkards and addicts in villages. I have asked them what is their state of affairs after the introduction of Prohibition. They have told me that after the introduction of Prohibition their economic condition have improved very much, their social conditions have improved, and that they are able to lead a peaceful domestic life. Though in the beginning they were all against Prohibition, now, after three or four years, they find that they are benefited and they are blessing those who are responsible for this reform. I appeal to the Government not to give up their policy of Prohibition on the score that, in the neighbouring State, they are not taking kindly to Prohibition. So far as we, Muslims, are concerned, we shall stand by Prohibition as one man and help to enforce it till it is proved substantially that it is a total failure.

" During the last one year, we have had quiter days. The whole speech is not a bright speech. But it has not presented any dark picture. For this we have to thank God, and we have also to thank His Excellency the Governor for presenting this good picture. It is a matter for congratulation that the money saved under famine expenditure will be utilized for education. His Excellency the Governor has stated that more educational facility to the people will be given by the opening of hundreds of schools during the

year. He has stated that his Government will open a medical college in Madurai, and that they are going to have an institution for training public health officers. All these are very beneficial to the country. But at the same time, I have to ventilate my grievances to the Government. The Government will have to treat the minorities with leniency and generosity. With these words, Sir, I thank His Excellency the Governor for his Address."

* DR. K. B. MENON :—" Mr. Speaker, Sir, I gave notice of an amendment to the Motion of Thanks to the Address of the Governor for two reasons, namely, (1) the omission in the Address of subjects that are important and (2) the mistake of commission of paying compliments to the acts of the Ministry which deserve censure more than praise. My amendment falls under three heads. The first item is land. There is a casual mention in the Governor's Address about the recent reforms that were passed by the Legislature. I do agree that those legislations are not unsatisfactory. They are good so far as they go. But my contention is that they do not go far enough. The Hon. the Chief Minister, speaking on the Tanjore Tenants and Pannaiyal Protection Bill, made the statement that that was only a pilot scheme which was to be followed up by large-scale land reforms. The Pannaiyal Protection Act was followed by the Malabar Tenancy (Amendment) Act. Even here we have not seen any radical changes affecting the fundamental basis of agriculture or of land holding. I believe that basic changes are necessary if there is to be any improvement in agriculture."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" Would the hon. Member kindly refer to where I said the thing that he attributes to me? "

3-40 p.m. DR. K. B. MENON :—" I believe it is correct."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" I would like to have some definite reference because I do not think I have said it. I may have said it, but I would like to know whether there is any authority for his statement."

DR. K. B. MENON :—" These are quotations from memory." (Laughter.)

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" May I suggest a mild censure for quoting from memory when finding fault with the Chief Minister? "

